KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 33, 29 May 2026 இதழ்:- 19

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# தமிழ்த் தேசியம் தனிநபர் தோல்விகளால் எடை போட முடியாத ஓர் இன உறுதியின் இருப்பிட அரசியல்! இனத்தின் ஆத்மா!



தமிழ்த்தேசியம் தனிநபர் தோல்விகளால் எடை போட முடியாத ஓர் இருப்பின் அரசியல் தமிழ்த்தேசியம் ஒரு தோற்றுப் போன கோட்பாடா? தமிழகச்சட்டமன்ற தேர்தலில் சீமானின் வாக்கு வங்கு ரோத்தை தொடர்ந்து ஒரு வாதம் சமூக ஊடகங்களை ஆட்கொண்டிருக்கிறது. தமிழ்தேசியம் தலைவரோடு தோற்றுப் போய் விட்டது அது ஒரு தோற்றுப் போன கோட்பாடு. உண்மையில் தமிழ்தேசியம் தோற்றுப் போய்விட்டதா? ஈழத்தமிழர்களாகிய நாம் நிலத்திலும் புலத்திலும் இருந்து நமது தேசிய சிந்தனையை சீமானிடம் மட்டும் அடகு வைத்தது தான் இதற்கான மூல காரணம். உண்மையில் தமிழ்த்தேசியம் பரந்து பேசப்பட வேண்டும் ஒருவரிடம் தங்கியோ அல்லது ஒருவர் மட்டும் உரிமை கோரும்படியாகவோ (5ம் பக்கம் பார்க்க)

## காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை! விஜய் ஊடாக தமிழரசு உணர வேண்டியது!

# விஜய் ரசிகர்களை எப்படி வாக்காளராக மாற்றினார்? விஜய் என்ன தருவார்? தமிழகத் தேர்தலும் நாமும்

விஜய் வெற்றி பெற்ற பின்,நடிகர் சத்யராஜ் சொன்னார் தமிழக அரசியலில் மக்கள் அரசியல் மயப்படுத்தப்படவில்லை, ரசிகர் மயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று. புதுடில்லியை மையமாகக் கொண்ட அரசியல் ஆய்வாளராகிய ராஜன்குறை கிருஷ்ணன் கூறுகிறார்... தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஒரு கட்சிக்கு தேவையான கட்டமைப்புகள், பலமான வேட்பாளர்கள் போன்ற எவையும் தேவையில்லை என்று விஜய் நிரூபித்துள்ளார் ''வேர்ச் சுவலாக''-மெய்நிகர் பரப்பில் ரசிகர்கள் மத்தியில் தன்னைக் கட்டமைத்துக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறார் என்ற பொருள்பட விஜய் கட்சியை தொடங்கிய போது தமிழகத் தைச் சேர்ந்த ஓர் அரசியல் விமர்சகர்- அவருடைய பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் அவர் ஒரு கிறிஸ்தவர் என்பது (15ம்பக்கம் 17ம் பக்கம் 12ம்பக்கம் பார்க்க)



## யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் பெருந்தீ! பல மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் இழப்பு!

# 30 ஆண்டுகால ஈழப்போரில் தேசியத் தலைவர் பிரபாகரன் சந்தித்த சிங்கள இராணுவ அதிகாரி கட்டன் கொத்தலாவல


THINKING OF
SELLING OR BUYING A HOME?
www.AgentSiva.com
Your neighborhood sales representative
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!
RE/MAX ACE EXPERIENCE THE DIFFERENCE REALTY INC., BROKERAGE
INDEPENDENTLY OWNED & OPERATED
we are ace
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Piravien Siva
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com
MLS
23 Years Real Estate Experience
150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada
Bus: 416-293-4500
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Adelaide Ave E / Simcoe St
Oshawa $699,000
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area
Kingston Rd & Sheppard Ave E
Scarborough $710,000
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area
Islington Ave / Steeles Ave W
Toronto $749,000
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse
Neilson Road & Sheppard
Scarborough $839,000
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!
Danforth and Dawes
Toronto $839,999
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views
Williamson & Westney
Ajax $849,000
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home
Rogers and Dufferin St
Toronto $849,999
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom
Markham Rd & Lawrence Ave
Scarborough $999,000
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow
Harmony Road / Conlin Road
Oshawa $999,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom
Cameo St / Burkolder Dr
Pickering $999,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home
Hwy10 / Hwy 89
Shelburne $999,900
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home
Markham/Steeles
Markham $999,999
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance
Markham Rd/ Lawrence Ave E
FOR LEASE
Scarborough $2,700
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint
Markham Rd & Sheppard Ave
FOR LEASE
Scarborough $2,250
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight
Simcoe St/ Windfields Farm Dr
FOR LEASE
Oshawa $1,500
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance
Markham & Denison
FOR LEASE
Markham $1,450
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தைகளின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# வளமான தமிழகம் மட்டுமல்ல வளமான ஈழம் அமைப்பதற்கும் விஜய் ஒத்துழைக்க வேண்டும்!



வளம் மிக்க தமிழகம் மாத்திரமல்லாமல் வளமான ஈழத்தை அமைப்பதற்கும் விஜய் ஒத்துழைக்க வேண்டும் என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் முக்கியஸ்தர்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் 10 மே 2026 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் புதிய முதல் அமைச்சருக்கு ஈழத்தமிழ் மக்கள் சார்பாக முழுமையான வாழ்த்துக்களை கூறுகின்றோம். தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு அவர் கடினமாக உழைப்பார் என்று நம்புகின்றோம். அவர் ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்த ஒருவர்.

இந்தியாவில் தமிழகம் பல விடயங்களில் வளர்ச்சியடைந்த ஒரு மாநிலமாக உள்ளது. அது அடுத்த கட்டம் நோக்கி செல்வதை ஈழத்தமிழர்கள் முக்கியமாக கருதுகின்றோம். தமிழகம் முன்னேறினால் அது ஈழத்தமிழர்களுக்கு நிறைய வாய்ப்புகளை உண்டாக்கும்.

ஈழத்தமிழர்களின் பிரச்சனைகளை முழுமையாக புரிந்து கொண்டு இரண்டு தரப்பும் கைகோர்த்து செயற்படுமாக இருந்தால் நிச்சயமாக உலகத்தில் தமிழ் மக்களின் குரல் ஓங்கி ஒலிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

விஜய் முதன்முறையாக வந்திருந்தாலும் கூட பெருமளவு மக்களின் கவனத்தை தன் பக்கம் திருப்பியுள்ளார். எனவே வளம் மிக்க தமிழகம் மாத்திரமல்லாமல் வளமான ஈழத்தை அமைப்பதற்கும் அவர் ஒத்துழைப்பார். ஒத்துழைக்க வேண்டும்.

கச்சதீவு விடயம் தொடர்பாக பேச வேண்டியது டில்லியும் கொழும்பும். கச்சதீவு தமிழகத்திற்கு சொந்தமாக வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. மீனவர் பிரச்சனையும் அதற்கு ஒரு முக்கிய காரணியாக உள்ளது. மீனவர் பிரச்சினைகள் தீர்க்கப்படும் பட்சத்தில் கச்சதீவு விடயம் காணாமல் போய் விடலாம். இந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்கான நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் அங்கும் இருக்கிறார்கள் இங்கும் இருக்கிறார்கள். எனவே உறுதியான பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த விடயங்களில் புதிய முதல் அமைச்சர் இந்திய மத்திய அரசுடன் பேசி காத்திரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதுவே எமது எதிர்பார்ப்பு என்றார்.

### விஜய்க்கு ஜனாதிபதி அநுரா வாழ்த்து

இந்தியாவின் தமிழ்நாட்டு முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள சி. ஜோசப் விஜய்க்கு இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். இது குறித்து ஜனாதிபதி தனது எக்ஸ் சமூக வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:



தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள கௌரவ சி. ஜோசப் விஜய் அவர்களுக்கு எனது நல்வாழ்த்துகள். இலங்கையும் தமிழ்நாடும் வரலாறு, கலாசாரம், வணிகம் மற்றும் தலைமுறை தலைமுறையாகத் தொடரும் மக்களுக்கிடையிலான ஆழமான பிணைப்புகளால் பிணைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் மேலும் நெருக்கமடைந்து வரும் நிலையில், எமது

(18ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# விஜய் பதவியேற்பு விழாவில் மரபு மீறல் வெடித்த புதிய சர்ச்சை! கட்சித் தலைவர்கள் கண்டனம்! மன்னிப்புக் கோரியது விஜய் அணி!



தமிழகத்தின் புதிய முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்ற நிகழ்வில், அரசு விழாக்களில் நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வரும் மரபு மாற்றப்பட்டது சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

பொதுவாகத் தமிழக அரசு விழாக்கள் மற்றும் பதவியேற்பு நிகழ்வுகளில், 'தமிழ்த்தாய் வாழ்த்து' பாடலுடன் விழா தொடங்கப்பட்டு, இறுதியில்தான் தேசிய கீதம் பாடப்படும் என்பது எழுதப்படாத விதியாகும். ஆனால் இன்றைய விழாவில் முதன் முதலாக வந்தே மாதரம் பாடல் பாடப்பட்டது; இரண்டாவதாக தேசிய கீதம் பாடப்பட்டது; இறுதியாகவே தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது.

தமிழக அரசியல் வரலாற்றில், தேசிய கீதத்திற்குப் பிறகு தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவது இதுவே முதன்முறை என்பதால் இது திட்டமிட்ட மாற்றமா என்ற கேள்வி எழுந்துள்ளது. தமிழக அரசின் அரசாணைப்படி, அரசு விழாக்களின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும் என்பது சட்டபூர்வமான விதியாகும்.

தமிழக அரசின் அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் கல்வி நிறுவனங்களிலும் விழாத் தொடக்கத்தில் 'நீராரும் கடலுடுத்த' எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும்' என்ற மரபை மாற்றியது மாநில உரிமைகளை மீறும் செயல் எனத் தமிழ் ஆர்வலர்கள் விமர்சித்து வருகின்றனர்.

விழாவின் இறுதியிலும் மீண்டும் வந்தே மாதரம் மற்றும் தேசிய கீதம் இசைக்கப்பட்ட விதம், தமிழகத்தின் தனித்துவமான அடையாளத்தைச் சிதைக்கும் முயற்சியோ எனப் பலரும் சமூக வலைதளங்களில் தங்களது கண்டனங்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் நீண்டகாலமாக அரசு நிகழ்ச்சிகளில், துவக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், நிறைவில் தேசிய கீதமும் பாடுவதுதான் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இன்று பதவியேற்பு நிகழ்ச்சியில் மூன்றாவதாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது ஏற்புடையதல்ல' என மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஆதரவுடன் முதல்வர் பொறுப்பேற்றிருக்கும் த.வெ.க. தலைவர் ச.ஜோசப் விஜய்க்கும், அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களுக்கும் இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)யின் தமிழ்நாடு மாநில செயற்குழு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் நீண்டகாலமாக அரசு நிகழ்ச்சிகளில், துவக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், நிறைவில் தேசியகீதமும் பாடுவதுதான் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. பதவியேற்பு நிகழ்ச்சியில் முதலில் வந்தே மாதரம் பாடப்பட்டதும், பெரும்பாலான மக்களால் புரிந்துகொள்ள முடியாமலும் இருந்தது. மேலும், இரண்டாவதாக தேசிய கீதமும், மூன்றாவதாக தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப்பட்டது. இது ஏற்புடையதல்ல. ஆகவே, அரசு நிகழ்ச்சிகளில் ஏற்கனவே கடைபிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் பின்பற்றப்படுவதை தமிழ்நாடு அரசு உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொள்கிறது எனத் தெரிவித்துள்ளது.

## அமைச்சர் ஆதவ் அர்ஜினா கருத்து



இது குறித்து அமைச்சர் ஆதவ் அர்ஜுனா விளக்கம் அளித்துள்ளார். நீராரும் கடலுடுத்த...' எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுக்கு நூற்றாண்டு கடந்த வரலாற்றுப் பெருமிதம் உள்ளது. இந்தப் பாடல் 'உலகெங்கும் பரவ வேண்டும்...' என்ற லட்சியத்தின் தொடர்ச்சியாகவே, தமிழ்நாடு அரசு மாநிலப் பாடலாக அதை அறிவித்தது. இத்தகைய பெருமைமிக்க தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலே, தமிழ்நாட்டில் நடக்கும் அரசு நிகழ்ச்சிகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் முதலில் ஒலிக்கப்படும். நிகழ்ச்சியின் இறுதியில் தேசிய கீதம் இசைக்கப்படும். அதுதான் வழக்கமான நடைமுறைற் பொருத்தமான நடைமுறை.

தமிழ்நாட்டில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமையில் அமைந்திருக்கும் புதிய அரசுக்கும் வழக்கமாக உள்ள இந்த நடைமுறையில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. இப்படியான சூழலில், இன்று தமிழக பொறுப்பு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தலைமையில் நடைபெற்ற முதல்வர் உள்ளிட்ட அமைச்சர்கள் பதவியேற்பு விழாவில், முதலில், வந்தே மாதரமும், பிறகு தேசிய கீதமும், மூன்றாவதாக தமிழ்த்தாய் வாழ்த்தும் இசைக்கப்பட்டது. இந்தப் புதிய நடைமுறை தமிழ்நாட்டிற்கு ஒவ்வாதது. தாய்த் தமிழ்நாட்டில், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் மூன்றாவதாக இசைக்கப்படுவதில், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமையில் அமைந்திருக்கும் தமிழ்நாடு அரசுக்கு உடன்பாடில்லை.

இது குறித்து நாங்கள் ஆளுநர் தரப்பிடம் வலியுறுத்திய போது, ஒன்றிய அரசின் புதிய சுற்றறிக்கையின்படி செயல்பட வேண்டிய பொறுப்பு ஆளுநருக்கு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதையொட்டி தவிர்க்க முடியாத சூழலில், (18ம் பக்கம் பார்க்க)



# தமிழ்த் தேசியம் தனிநபர் தோல்விகளால் எடை போட முடியாத ஓர் இன உறுதியின் இருப்பிட அரசியல்! இனத்தின் ஆத்மா!

தமிழ்த்தேசியம் தனிநபர் தோல்விகளால் எடை போட முடியாத ஓர் இருப்பின் அரசியல் தமிழ்த்தேசியம் ஒரு தோற்றுப் போன கோட்பாடா? தமிழகச்சட்டமன்ற தேர்தலில் சீமானின் வாக்கு வங்குரோத்தை தொடர்ந்து ஒரு வாதம் சமூக ஊடகங்களை ஆட்கொண்டிருக்கிறது .

தமிழ்தேசியம் தலைவரோடு தோற்றுப் போய் விட்டது அது ஒரு தோற்றுப் போன கோட்பாடு. உண்மையில் தமிழ்தேசியம் தோற்றுப்போய்விட்டதா ?

ஈழத்தமிழர்களாகிய நாம் நிலத்திலும் புலத்திலும் இருந்து நமது தேசிய சிந்தனையை சீமானிடம் மட்டும் அடகு வைத்தது தான் இதற்கான மூல காரணம்.

உண்மையில் தமிழ்த்தேசியம் பரந்து பேசப்பட வேண்டும் , ஒருவரிடம் தங்கியோ அல்லது ஒருவர் மட்டும் உரிமை கோரும்படியாகவோ விட்டு விடக் கூடாது. இது எல்லா இடங்களுக்கும் பொருந்தும் அப்படி விட்டு விடுவதால் தான் அந்த நபர்களின் தோல்வி தமிழ்த்தேசியத்தின் தோல்வியாக கருதப்படுகிறது .

காலம் கடந்து நமது தலைமுறைகளுக்கு சரியான செய்தியும் விளக்கமும் கிடைக்கப்பெறாததன் விளைவே இது. இந்த விவகாரத்தை தத்துவார்த்த ரீதியாக பார்ப்போம் .

ஆயுதங்கள் மௌனித்து விட்டன, எனவே தமிழ்த் தேசியம் தோற்று விட்டது இது இன்றைய சமகால அரசியல் உரையாடல்களில் அடிக்கடி ஒலிக்கத் தொடங்கியிருக்கும் ஒரு தர்க்க மற்ற வாதமாகும் .

ஒரு கோட்பாட்டின் வெற்றியையும் தோல்வியையும் அதன் இராணுவ வலிமையைக் கொண்டு மட்டும் அளவிடுவது வரலாற்று அறியாமையாகும்.

அரசியல் தத்துவவாதி கார்ல் வான் கிளாஸ்விட்ஸ் (Carl von Clausewitz) முன்னர் கூறியது போல, 'போர் என்பது அரசியல் நோக்கங்களை அடைவதற்கான ஒரு கருவி மட்டுமே அதுவே இலக்கு அல்ல.



உண்மையில் கருவி உடைந்திருக்கலாம், ஆனால் அந்த நிலத்தை, மொழியை, உரிமையை மீட்கத் துடிக்கும் தமிழ்த் தேசியம் எனும் அடிப்படை இலக்கு இன்றும் சிதையாமல் இருப்பதே அந்த கோட்பாட்டின் முதல் வெற்றியாகும்.

ஒன்று தமிழ்த் தேசியம் என்பது யாரோ ஒருவருக்கு எதிரான கோட்பாடு அல்ல அது ஒரு இனத்தின் இருப்பிற்கான தற்காப்புத் தத்துவம். கடந்த 1948ல் குடியுரிமை பறிக்கப்பட்ட போதும், அதேபோல 1956ல் மொழி ஒடுக்கப்பட்ட போதும் தமிழர்களை ஒரு பாதுகாப்புக் கவசமாக நின்று காத்தது இந்தத் தேசிய உணர்வு தான்.

நவீன அரசியல் ஆய்வாளர் பெனடிக்ட் ஆண்டர்சன் தேசத்தை ஒரு 'கற்பிதம் செய்யப்பட்ட சமூகம்' (Imagined Community) என்று குறிப்பிடுகின்றார் .

இன்று புவியியல் ரீதியாக உலகம் பரந்து வாழ்ந்தாலும், லண்டன் முதல் பாரிஸ் வரை ஒரு தமிழன் தன்னை ஒரு பெரும் நீண்ட வரலாற்று இனத்தின் வாரிசாக உணர்வது, இந்தக்கோட்பாடு நிலங்களைக் கடந்து மக்களின் மனங்களில் ஒரு வேனவாவாக மாறியிருப்பதை நிறுவுகிறது. உலக வரலாற்றில் எந்த ஒரு தேசிய இனமும் முதல் சில தசாப்தங்களில் வெற்றியை சுவைத்ததில்லை.

சுமார் 2000 ஆண்டுகள் நாடற்றவர்களாகச் சிதறடிக்கப்பட்ட யூதர்களை ஒன்றிணைத்தது சியோனிசம் என்ற தேசிய உணர்வு மட்டுமே, அவர்கள் தங்கள் போர் முனையில் வெல்வதற்கு முன்பே, தங்களின் பொருளாதார மற்றும் அறிவுப் பலத்தால் உலக நாடுகளின் தீர்மானங்களை மாற்றியமைக்கும் அதாவது பேரம் பேசும் ஒரு சக்தியாக உருவெடுத்தனர்.

தமிழ்த் தேசியமும் இன்று அதே பரிணாம வளர்ச்சியை நோக்கி நகர்கிறது. புலம்பெயர் தமிழர்களிடம் இருக்கும் பொருளாதாரப் பலம், இனி வெறும் வாழ்க்கைச் செலவுக்கான நிதியாக மட்டுமல்லாமல் சர்வதேச இராஜதந்திர மேசைகளில் தேசம் காக்கும் அரசியல் சக்தியாக மாற வேண்டிய தருணம் இதுவாகும்.

இந்த நேரத்தில் நா பிரழ்வதும் தனிப்பட்ட விருப்புகளுக்காக கொள்கைகளை கொலைசெய்யப்பட்டதாக கூறுவதுமே அபத்தமாகும் .

இன்றைய உலகில் போர் என்பது வெறும் போர்க்களங்களோடு நின்று விடுவதில்லை. ஜோசப் நை (Joseph Nye) என்ற அறிஞர் முன்மொழிந்த மென்மையான அதிகாரம் (Soft Power) எனும் தத்துவத்தின்படி, ஒரு இனம் தனது கல்வி, கலாச்சாரம் மற்றும் பொருளாதார முதலீடுகள் மூலம் சர்வ தேசச் சமூகத்தில் செல்வாக்கு செலுத்த முடியும்.

ஆயுதப் போராட்டம் மௌனித்திருக்கலாம், ஆனால் அந்தப் போராட்டத்தை ஏந்த வைத்த கோட்பாடோ அல்லது நியாயமான காரணமோ இன்னும் சாகவில்லை.

சர்வதேச மனித உரிமை அமைப்புகள் முதல் உலக நாடுகளின் நாடாளுமன்றங்கள் வரை இன்றும் ஈழத் தமிழர்களின் விவகாரம் ஒரு கனதியான பேசுபொருளாகவே இருக்கிறது என்றால், அதற்குப் பின்னால் தமிழ்த் தேசியம் எனும் கருத்தியல் ஓர் அழுத்தமான அரசியல் சக்தியாக இயங்குவதே மூலகாரணமாகும் .

தமிழ்த் தேசியம் என்பது முடிந்து போன ஒரு அத்தியாயம் அல்ல அது காலத்தின் தேவைக்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொண்டு, புதிய வடிவில் பயணத்தைத் தொடரும் ஒரு தத்துவத் தொடர்ச்சியாகும் .

வரலாறு மிக நீண்டது அதில் ஒரு பக்கத்தை வைத்து முழுப் புத்தகத்தையும் எடை போட முடியாது. அன்று ஈழவர்களாக நமது ஆயுதமே நமது வீரமாகும். ஆனால் இன்று நம் ஆயுதங்கள் கல்வி, பொருளாதாரம் மற்றும் இராஜதந்திரம் ஆகியவையே, கருவிகள் மாறலாம், ஆனால் நமது மண்ணில் நாம் சுதந்திரமாக நமக்காக கௌரவத்தோடு வாழ வேண்டும் என்ற இலக்கு மாறாது.

தமிழ்த் தேசியம் என்பது வெறும் கனவு அல்ல அது எமது அடுத்த தலைமுறை நாம் யார்? என்று தெரியாமல் நமது வரலாற்றை அறியாமல் தொலைந்து போகாமல் இருப்பதற்கான இறுதிப் போராட்டமாகும். எனவே தான் தமிழ்த் தேசியம் தோற்றுப்போனது என்ற கருத்தியலை கனவில் நினைப்பதுகூட ஒருவிதமான தற்கொலை மனநிலையாகும். நமக்கு பிடித்த ஒருவரை நியாயப்படுத்த அல்லது பிடிக்காதவரை விமர்சிக்க ஒரு பொதுக்கருத்தியலை வீழ்த்துவது ஒருபோதும் ஆரோக்கியமான தாகாது.

# யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் பெருந்தீ! பல மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் இழப்பு!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஏற்பட்ட தீ சுமார் 5 மணி நேர போராட்டத்தின் பின் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் விபத்தினால் பல மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. போதனா வைத்தியசாலையின் மருந்து களஞ்சிய சாலை பகுதியில் 09 மே 2026 சனிக்கிழமை அதிகாலை தீ விபத்து ஏற்பட்டு அப்பகுதி தீப்பற்றி எரிந்தது.

தீயினை அணைக்க வைத்தியசாலை ஊழியர்கள் முயற்சிகளை மேற்கொண்டதுடன் மாநகர சபை தீயணைப்பு பிரிவினர் இராணுவத்தினர் விமான படையினர் பொலிஸார் , மின்சார சபையினர் உள்ளிட்ட பல தரப்பினரும் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயினை அணைக்க பெரும் போராட்டம் நடத்தினர். சுமார் 05 மணி நேர போராட்டத்தின் பின் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

மருந்து களஞ்சிய சாலைக்குள் எளிதில் தீ பற்ற கூடிய அசிட் உள்ளிட்டவை. யும் காணப்பட்டமையால் தீ வேகமாக பரவியுள்ளது,

இதனால் பல மில்லியன் ரூபாய் பெறுமதியான மருந்துகள் தீயில் ஏரிந்துள்ள நிலையில் கட்டடம் உள்ளிட்டவையும் கடும் சேதமடைந்துள்ளன. தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை தற்போது மருந்து களஞ்சிய சாலையை சுத்தம் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை குறித்த களஞ்சிய சாலை பகுதிக்குள் அண்மையில் மருந்துகளை பாதுகாப்பாக வைத்திருக்க குளிரூட்டப்பட்ட அறை (Cool Room ) அமைக்கப்பட்டதாகவும் அதில் ஏற்பட்ட மின் கசிவு இந்த தீ விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. தீ விபத்து தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பொது மக்கள் எவ்வித அச்சமும் இன்றி வழக்கம் போல் வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்படி விடயத்தைத் தெரிவித்துள்ளார்.



# எடுத்த எடுப்பிலேயே அரசிடம் பணம் இல்லையெனப் பேசி மக்களை ஏமாற்றாதீர்கள் விஜய்க்கு ஸ்டாலின் எச்சரிக்கை!

எடுத்த எடுப்பிலேயே அரசிடம் பணம் இல்லை எனப் பேச ஆரம்பிக்காதீங்க... உங்களுக்கு வாக்களித்த மக்களை மீண்டும் ஏமாற்றி திசைதிருப்பாதீங்க என்று திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவு அறிக்கையில், 'தமிழ்நாடு முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பதவியேற்றதும் தாங்கள் கையெழுத்திட்டுள்ள அறிவிப்புகளை வரவேற்கிறேன். எடுத்த எடுப்பிலேயே அரசிடம் பணம் இல்லை எனப் பேச ஆரம்பிக்காதீங்க. அதெல்லாம் இருக்கு. மக்களுக்குக் கொடுக்க மனசும், ஆட்சித் திறமையும் தான் வேணும்.

ஐந்து ஆண்டுகளாக, கோவிட், வெள்ளம் போன்ற பல பிரச்சினைகளையும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஓர வஞ்சனையையும் சமாளிச்சுதான் நாங்க எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை நிறைவேற்றினோம்.

'ரூபாய் 10 லட்சம் கோடி கடனை வைத்துவிட்டு கஜானாவைத் துடைத்து விட்டுச் சென்றுள்ளது கடந்த அரசு' - என்ற குற்றச்சாட்டை முதல் உரையிலேயே சொல்லி இருக்கீங்களே... அனுமதிக்கப்பட்ட வரம்புக்குட்பட்டே தமிழ்நாட்டின் கடன் அளவு இருக்கிறது.

தமிழ்நாடு அரசின் நிதிநிலை பற்றி கடந்த பிப்ரவரி மாத பட்ஜெட்லயே தெளிவா நாங்க சொல்லிட்டோம். அது உங்களுக்குத் தெரியாதா? அதுக்குப் பிறகுதான நீங்க பல வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்தீங்க? உங்களுக்கு வாக்களித்த மக்களை மீண்டும் ஏமாற்றி திசைதிருப்பாதீங்க!

நடைமுறைக்கு சாத்தியமானதை மட்டுமே வாக்குறுதிகளாக அளிக்கிறேன் எனக் கூறி ஆட்சிக்கு வந்துள்ள நீங்கள் இப்போது தான் அரசு நிர்வாகத்துக்குள் அடியெடுத்து வைக்கிறீர்கள். கூடிய விரைவில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றலாம் எனும் நுணுக்கங்களையும் எங்களைப் போலவே நீங்களும் நிச்சயம் கற்றுக் கொள்வீர்கள் என நான் நம்புகிறேன். வாக்களித்த மக்களோடு, நானும் அதையே எதிர்பார்க்கிறேன்.

தங்களின் ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணம் தொடர எனது வாழ்த்துகள்!' என தெரிவித்துள்ளார்.

## உதயநிதி கருத்து

ஆற்றல்மிகு எதிர்க்கட்சியாக மக்களின் குரலை நாங்கள் எதிரொலிப்போம். ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வைப்போம். எங்கள் தலைவர் சொல்லியது போல், எதிரிக்கட்சியாக இல்லாமல், ஒரு நல்ல எதிர்க்கட்சியாக செயல்படுவோம் என திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதல்வர் ஜோசப் விஜய் தலைமையில் அமைந்துள்ள புதிய தமிழக அரசுக்கு தனது வாழ்த்தினை உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியுள்ளதாவது: தமிழ்நாட்டின் புதிய அரசுக்கும் முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள விஜய்க்கு என் வாழ்த்துகள். இந்த நேரத்தில், 17-வது தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றும் பெரிய பொறுப்பை எனக்கு வழங்கியிருக்கும் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும், கழகப் பொதுச்செயலாளர் மற்றும் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், தலைவர் கருணாநிதியின் உடன்பிறப்புகள், தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது அன்பான நன்றி.



கழகத் தலைவரின் வழிகாட்டுதலின்படி, சட்டமன்றத்திலும் - மக்கள் மன்றத்திலும் - சமூக ஊடகங்களிலும் ஆற்றல் மிகு எதிர்க்கட்சியாக மக்களின் குரலை நாங்கள் எதிரொலிப்போம். ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வைப்போம். எங்கள் தலைவர் சொல்லியது போல், எதிரிக்கட்சியாக இல்லாமல், ஒரு நல்ல எதிர்க்கட்சியாக செயல்படுவோம். மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான ஊடகமாக நாங்கள் தான் இனி இருப்போம். என் மீது நம்பிக்கை வைத்து மக்கள் கொடுத்திருக்கும் இந்தப் பொறுப்புக்கு நான் நூறு சதவீதம் உண்மையாக இருப்பேன். கடுமையாக உழைப்பேன் என அவர் தெரிவித்துள்ளார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# பொலிசார் பௌத்த பீடங்களுக்குப் பயமா? சுமந்திரன் கேள்வி!

# வடக்கில் மிக உயரமான புத்தர் சிலை நயினாதீவில் திறப்பு!



பொலிஸார் பௌத்தர்களாக இருப்பதனால் பௌத்த பீடாதிபதிகளுக்கு பயந்து சட்டத்தை நடைமுறைப்படுத்த முயல்பவர்களை தடுத்து சட்ட மீறல்களை செய்ய முனைகின்றார்கள் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் உள்ள வலி. வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான 'பவானி' வீதியை மீட்கும் நடவடிக்கையை பிரதேச சபை கைவிட வேண்டும் என பலாலி பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

குறித்த வழக்கு விசாரணையின் போது வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி இருந்தார். குறித்த வழக்கு விசாரணையின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விகாரை பகுதிக்குள் அமைத்துள்ள பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை மீட்டால் சமாதான சீர்குழைவு ஏற்படும் என பொலிஸார் மன்றில் தெரிவித்து இருக்கின்றனர்.

பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை மறித்து வேலி அடைத்து வைத்துள்ள நிலையில் அதனை சட்டத்தின் பிரகாரம் அகற்ற பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

சட்டத்தினை நடைமுறைப்படுத்துபவர்களைதடுக்க முற்படுபவர்கள் இடையூறு ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகவே பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கே வீதியை பிடித்து வைத்துள்ள விகாராதிபதி சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் சமாதான சீர்குழைவு ஏற்படும் என முறைப்பாடு செய்துள்ளார். இங்கே சமாதான சீர்குழைவு யாரால் ஏற்படும்? நான் தான் சமாதான சீர்குழைவை ஏற்படுத்துவேன் என்பது போல விகாராதிபதி முறைப்பாடு செய்துள்ளார்

சட்டத்தை நடைமுறைப்படுத்துவர்களை தடுத்து சட்ட மீறல்களை பொலிஸார் செய்ய முற்படுகின்றனர். இது சிங்கள பௌத்த மேலாதிக்க மனநிலை ஆகும். பொலிஸாரும் பௌத்தர்களாக இருப்பதனால் பௌத்த பீடாதிபதிகளுக்கு பயந்து சட்ட மீறல்களை மேற்கொள்ள முயல்கின்றனர்.

சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களை தடுப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நயினாதீவு ரஜமஹா விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 88 அடி உயரமுடைய புத்த சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் இருந்து பெருமளவான பௌத்தர்கள் அவர்களின் சமய சம்பிரதாயங்களுடன் நயினாதீவுக்கு சென்று அங்கு முதலில் நயினாதீவு நாக பூசணி அம்மனை வழிபட்டு, அங்கிருந்து ஊர்வலமாக விகாரைக்கு சென்று, வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் புத்த சிலை திறப்பு நிகழ்விலும் கலந்து கொண்டனர்.




Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...


FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# 30 ஆண்டுகால ஈழப்போரில் தேசியத் தலைவர் பிரபாகரன் சந்தித்த சிங்கள இராணுவ அதிகாரி கப்டன் கொத்தலாவல

முப்பது ஆண்டுகள் நீண்ட ஈழப் போர்காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர மேதகு பிரபாகரன் அவர்கள் வெளிப்படையாக மதித்த மிகச் சில இலங்கை இராணுவ அதிகாரிகளில் ஒருவராகக் கருதப்பட்டவர் கப்டன் ஜயந்த கொத்தலாவல. பின்னாளில் லெப்டினன்ட் கர்ணலாக உயர்ந்த அவர், இலங்கை சிங்கப் படைப்பிரிவைச் சேர்ந்த அதிகாரி யாழ்ப்பாணக் கோட்டை புலிகளிடம் வீழ்ந்து விடாமல் தடுத்துப் போராடிய வீர அதிகாரியாக அப்போது புகழ் பெற்றிருந்தார். உயரமான உடல்வாகு, தாடி, கடினமான தோற்றம், வித்தியாசமான நடத்தை இவை அனைத்தாலும் அவர் தனித்துவமாகத் தெரிந்தவர்.




ஆனால் அந்த இராணுவ அதிகாரிக்கும் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினருமான ரஹீம் என்றழைக்கப்பட்ட ஸ்ரீகுமார் கனகரத்தினத்துக்கும் உருவான உறவு, அக்காலத்தில் பலரையும் ஆச்சரியப்படுத்தியது. கிட்டு அவர்களின் மொழி பெயர்ப்பாளராகவும் துணை நிலையிலுமிருந்த ரஹீம், புலிகள் இயக்கத்தின் நம்பிக்கைக்குரியவர்களில் ஒருவராகக் கருதப்பட்டார்.

இந்த விசித்திரமான நட்பு குறித்து எழுத்தாளர் Rohan Gunaratna மற்றும் பேராசிரியர் Rajan Hoole போன்றோர் தங்கள் நூல்களிலும் குறிப்பிட்டுள்ளனர். பின்னாளில் மனநல மருத்துவர் Ruwan M. Jayatunge ரஹீமுடன் நடத்திய உரையாடல்களில், இவர்களைப் பற்றிய பல வதந்திகளுக்கும் நேரடியாக விளக்கங்கள் கிடைத்தன.

1986 அக்டோபரில் அடம்பன் பகுதியில் நடந்த மோதலில் பல புலி உறுப்பினர்களும் எட்டு இலங்கை இராணுவ வீரர்களும் உயிரிழந்தனர். இரண்டு இராணுவ வீரர்கள் உயிருடன் பிடிக்கப்பட்டனர். போரில் உயிரிழந்த சிப்பாய்களின் உடல்களை கவனிப்பதற்கான பொறுப்பு ரஹீமிடம் வந்தது. அந்தக் காலத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போர்க்கள உடல் பரிமாற்றங்களில் தீவிரமாகச் செயல்படவில்லை. அப்போது ரஹீம் எடுத்த முடிவு முற்றிலும் அபூர்வமானது. யாழ் கோட்டையில் இருந்த இலங்கை இராணுவத்துடன் தொடர்பு கொண்டு, உயிரிழந்த சிப்பாய்களின் உடல்களை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

இரு தரப்பும் யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா மைதானத்தில் உடல்களை ஒப்படைக்க ஒப்புக் கொண்டன. அவற்றைப் பெறும் பொறுப்பு கப்டன் கொத்தலாவலவிடம் வந்தது. ரஹீம் ஆயுதமின்றி உடல்களை நேரில் கொண்டு வந்தார்.

அப்போது கொத்தலாவல, ஏன் இந்த உடல்களை திருப்பிக் கொடுக்க நினைத்தீர்கள்? என்று கேட்டதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு ரஹீம் அமைதியாக, நான் போரில் சாகிறேனென்றால் என் அம்மா என் உடலைக் காண விரும்புவார். அதுபோல இந்தச் சிப்பாய்களின் அம்மாக்களும் தங்கள் மகன்களை இறுதியாகப் பார்க்கவே விரும்புவார்கள், என்று பதிலளித்தார்.

அந்தச் சொற்களை கேட்டவுடன் கொத்தலாவல ரஹீமை அணைத்துப் பிடித்து நன்றி தெரிவித்ததாக ரஹீம் பின்னர் நினைவு கூர்ந்துள்ளார். அதுவே அவர்களுடைய நட்பின் தொடக்கம்.

பின்னர் நடிகரும் அரசியல்வாதியுமான வஜயகுமாரதுங்கா அமைதி முயற்சிக்காக யாழ்ப்பாணம் வந்தபோது, ரஹீம் மூலமாக கொத்தலாவல பல மூத்த புலி உறுப்பினர்களைச் சந்தித்தார். அதன் பின்னரும் இருவரும் தொலைபேசியில் தொடர்பில் இருந்தனர்.

1987இல் இலங்கை அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு முயன்றபோது, கொத்தலாவலவின் இந்த அசாதாரணத் தொடர்பு தொடர்பு வழியாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஒரு சந்தர்ப்பத்தில் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்ற கொத்தலாவல தலைவர் பிரபாகரன் அவர்களையே நேரில் சந்தித்ததாகவும், புலிகள் அவருக்கு விருந்தளித்ததாகவும் கூறப்படுகிறது. பின்னர் வெளிநாட்டு இதழொன்றுக்கு அளித்த பேட்டியில், அவர் திறமையான போராளி என்பதால் நாங்கள் அவரை மதித்தோம் என்று பிரபாகரன் குறிப்பிட்டதாகச் சொல்லப்படுகிறது.

இத்தகைய உறவு இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியது இயல்பு தான். அப்போது தேசிய (18ம் பக்கம் பார்க்க)

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



Vivekananthan Sasitharan
*Barrister, Solicitor & Notary Public*



Rajabalini Sasitharan
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# காலம் எவருக்காகவும் காத்திருப்பதில்லை! விஜய் ஊடாக தமிழரசு உணர வேண்டியது!

காலம் என்னைக் கொண்டு சென்று ஓரிடத்தில் அமர வைக்கும். அதற்கான நேரம், சூழல், இடம் அனைத்தும் அமைந்து வர வேண்டும். அது வரும்போது நிச்சயமாக தமிழ்நாட்டு மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். அந்தச் சமயத்தில் நான் வருவேன்'.

இது, இப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராகியிருக்கும் ஜோசப் விஜய் சந்திரசேகர் எனும் நடிகர் விஜய் பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் கூறியது. 2011ம் ஆண்டு தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த செவ்வியில் கூறியதை அப்போது எவரும் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் அதுவே இப்போது நிதர்சனமாகியுள்ளது.

தனது பட்டாபிசேகத்துக்காக பதினான்கு ஆண்டுகள் தமது மனைவி சீதையுடன் காடேகிய இராமரை தெய்வமாகக் கொண்டாடும் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி புரியும் இந்தியாவில், தமிழர்கள் திரட்சியாக வாழும் தமிழ்நாட்டில் திராவிட ஆட்சிக்கு ஓய்வு கொடுத்து தமிழர் ஒருவரின் தலைமையில் புதிய ஆட்சி மலர்ந்துள்ளது.

'காலம் வரும்போது நான் வருவேன்' என்று முற்கூட்டியே முன் மொழிந்த விஜய் தமிழக வெற்றிக் கழகத்தை உருவாக்கி மூன்று ஆண்டுகள் கூட ஆகவில்லை. மக்களின் நம்பிக்கை நாயகனாக தேர்தல் மூலம் 108 ஆசனங்களை முதல் தேர்தலிலேயே பெற முடிந்தது என்பது ஒரு தனி வரலாறாக சரித்திரம் எழுத ஆரம்பித்துள்ளது.

அடிப்படையில் ,வரும் ஓர் சினிமா நடிகர் தான். இதுவே அவரது தொழிலாகவும், வருமானமாகவும் இருந்தது. அரசியல் வாரிசாக இவர் அறிமுகமாகவில்லை. ஆனால், எடுத்த எடுப்பிலேயே அறுபது ஆண்டுகளை அண்மித்த திராவிட ஆட்சிகளுக்கு மக்களூடாகத் தீர்ப்பளித்த ஒரு விடிவெள்ளியாக மலர்ந்திருக்கிறார்.

தனித்து ஆட்சியமைக்க எந்தக் கட்சிக்கும் 118 பிரதிநிதிகள் வேண்டும். 108 மட்டுமே இவருக்குக் கிடைத்தது. இதனைக் குறியாக வைத்து இவரை ஆட்சிக் கதிரையில் ஏறாமால் தடுக்க பல வழிகளாலும் பல கட்சிகளும் முயற்சிகளில் ஈடுபட்டார்கள். மோடியின் பாரதிய ஜனதா கட்சி ஏஜன்டாக இருக்கும் தமிழக ஆளுனர் அர்லேகர் ஏற்க முடியாத நிபந்தனைகளை விதித்தார். விஜய்யின் வெற்றியை ஏற்றுக் கொள்ள முடியாத கட்சிகள் கூட ஆளுனரின் முடிவை வன்மையாகக் கண்டித்தன.

திராவிட முன்னேற்ற கழகக் கூட்டணியில் ஐந்து இடங்களில் வெற்றி பெற்ற ,ந்திய காங்கிரஸ் விஜய் அணிக்கு வழங்கிய ஆதரவை ஜீரணிக்க முடியாத மோடியின் பாரதிய ஜனதா கட்சி ,யலுமானவரை விஜய் முதலமைச்சராவதை தடுக்கவே முனைந்தது. எனினும், நான்காம் திகதிக்கும் எட்டாம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளால் விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யுனிஸ்ட், மார்க்சிய கம்யுனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியவற்றின் ஆதரவு கிடைத்ததால் விஜய்யின் ஆதரவு 118ஐ தாண்டியது.

ஜனநாயக மரபுப்படி கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சிக்கு அனுமதி அளிக்க வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழக தலைவரும், தமது தொகுதியில் தோல்வி கண்டவருமான ஸ்ராலின் கூறினாராயினும், தங்கள் கூட்டணியிலிருந்து காங்கிரஸ் பாய்ந்து தமிழக வெற்றிக் கழகத்துக்கு ஆதரவு வழங்கியதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. காங்கிரஸ் இன்னமும் தனது பழைய குணத்தை மாற்றிக் கொள்ளவில்லை




என்று ஸ்ராலின் கூறிய கருத்து அவரது ஆற்றாமையின் வெளிப்பாடாக அமைந்தது எனலாம்.

இன்னொரு கருத்துக் கூறலையும் இங்கு கவனிக்க வேண்டும். புதிய ஆட்சியின் முதல் ஆறு மாதங்களை மிக உன்னிப்பாக நாங்கள் கவனிப்போம். அதன் பின்னரே எந்த முடிவையும் தாங்கள் எடுக்க நேரிடலாம் என்றும் ஸ்ராலின் கூறியுள்ளார். தி.மு.க. கூட்டணியில் தேர்தலில் வெற்றி பெற்ற மார்க்ஸிச கம்யுனிஸ்ட் கட்சியின் சண்முகம் பகிரங்கமாகத் தெரிவித்துள்ள கருத்தும் சூட்சுமமான ஒரு விடயத்தை சுட்டுவது போலவே தெரிகிறது. எந்த நிபந்தனையும் இன்றி, எந்த ஒரு பதவியும் ஏற்காது வெளியிலிருந்தவாறு தமிழக வெற்றிக் கழகத்துக்கு ஆதரவை வழங்க தங்கள் கட்சி முன்வந்துள்ளதாக தெரிவித்துள்ள இவர் தங்கள் உறவு தி.மு.க.வுடன் தொடர்பு தொடரும் என்றும் கூறியுள்ளார்.

மேற்கு நாடுகளில் (இன்று எல்லா நாடுகளிலும்) திருமணமாகாது இருவர் கூடி வாழ்வதும், வேண்டுமானால் பிரிந்து செல்வதையும் ஒத்ததாக இவரது கருத்து அமைந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. தமிழக வெற்றிக கழகத்தின் ஆட்சிக்கு முதல் ஆறு மாதங்களுக்கு எந்தத் தொந்தரவையும் கொடுக்காது என தி.மு.க தலைவர் ஸ்ராலின் கூறியிருப்பதற்கும், விஜய்யின் ஆட்சிக்கு வெளியிலிருந்து நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவோம் ஆனால் தி.மு.க.வுடனான உறவு தொடருமென மார்க்ஸிச கம்யுனிஸ்ட் செயலாளர் சண்முகம் வெளிப்படையாகத் தெரிவித்திருப்பதற்கும் இடையில் ஏதோ ஒன்று தொக்கி நிற்பதை உணர முடிகிறது.

தமிழக அரசியல் விமர்சகர் ஒருவர் கூறியது போன்று தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.வில் உள்ள அதிருப்தியாளர்களை அடுத்த ஆறு மாதத்துக்குள் எவ்வாறு கையாளலாம் என்பதில் விஜய் அடையும் வெற்றியே அவரது தேர்தல் வெற்றியை முழுமையாக்கலாம்.

1949ம் ஆண்டு உருவான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சித் தொடரை, திராவிடம் என்ற மாயையுள் சிக்கியிருந்த தமிழகத்தை 51 வயதான ஒருவர் புதிய கட்சி ஆரம்பித்து முதல் மூன்று வருடங்களுக்குள் முதலாவது தேர்தலை சந்தித்து மக்கள் மனதில் அமர்ந்து ஆட்சியைக் கைப்பற்றியிருப்பது அரசியலில் மகத்தான சாதனை என்றே சொல்ல வேண்டும்.

விஜய்யின் வெற்றிக்கு இலங்கையிலிருந்து வாழ்த்துகள் பறக்கின்றன. தெற்கிலிருந்து நாமல் ராஜபக்ச உட்பட மலையக மக்களின் பிரதிநிதிகள், ,ஸ்லாமிய கட்சிகளின் தலைவர்கள் வாழ்த்துகளை தெரிவிக்கின்றனர்.

தமிழ்த் தேசிய தரப்பில் தமிழரசு கட்சியும், தமிழ் காங்கிரசும் சில எதிர்பார்ப்புகளை கோரிக்கைகளாக வைத்து வாழ்த்துத் தெரிவித்துள்ளன. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி வழக்கம் போல தடுமாறிக் கொண்டிருப்பதுபோல தெரிகிறது. தமிழரசுக் கட்சியின் வாழ்த்துகள் அதன் உட்கட்சி முரண்பாட்டை அப்பட்டமாக



படம் பிடித்துக் காட்டுகிறது. கட்சியின் தலைவராகத் தெரிவானவரும், நாடாளுமன்றக் குழுவின் தலைவராக இருந்தவருமான சிவஞானம் சிறீதரன், கட்சியின் தற்போதைய நாடாளுமன்றக் குழுத்தலைவரான இராசமாணிக்கம் சாணக்கிய, கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் தனித்தனியாக வாழ்த்துகளை அனுப்பி கட்சியின் ஒழுங்கற்ற அலங்கோல நிலையை கடல் கடந்தும் தெரிய வைத்துள்ளனர். வடக்கு கிழக்கில் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தில் உள்ள உள்ளுராட்சிச் சபைகளும் தீர்மானங்களை நிறைவேற்றி தமிழக புதிய முதல்வருக்கு வாழ்த்துகளை தெரிவிக்கக்கூடும்.

தமிழரசுக் கட்சியின் உயர்மட்டக் குழுவொன்று நேரடியாக தமிழகத்துக்குச் சென்று தங்கள் வாழ்த்தை தெரிவிக்க முயற்சிக்கலாம். அதற்கு முன்னர் எவரும் எதிர்பாராத விதமாக சிவஞானம் சிறீதரன் எம்.பி. தமிழகம் சென்று வாழ்த்துக் கூறும் படங்கள் ஊடகங்களில் வெளிவந்தாலும் ஆச்சரியப்பட முடியாது. கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கட்சியின் உத்தியோகபூர்வ வாழ்த்தை அறிக்கையாக விடுவார் எனவும் எதிர்பார்க்கலாம்.

தேர்தல் காலத்தில் ,லங்கையின் இனப் பிரச்சனை, இதற்கான தீர்வுத் தேடல், புதிய அரசியலமைப்பு உருவாக்கம், தாமதமாகும் மாகாண சபைத் தேர்தல் போன்ற எதனையுமே தெரிவிக்காத தமிழக வெற்றிக கழகத்துக்கு யாராவது முதலில் பாடம் எடுத்து விளங்க வைக்க வேண்டும். இல்லையெனில் எதனையும் புரிந்து கொள்ள முடியாது பதிலளிக்க முடியாததாகவே நிலைமை அமையலாம்.

தமிழக தேர்தல் மற்றும் தமிழரசுக் கட்சியின் இன்றைய நிலை பற்றி

**கட்டுரையாளர்:-**
**பனங்காட்டான்**

கிழக்கிலங்கை பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருடன் இன்று சம்பாசித்தபோது கள நிலைவரத்தை பின்வருமாறு விபரித்தார்:

இந்தியாவில் திராவிடம் என்ற பெயரில் 1949ல் உருவாகி இதுவரை தமிழகத்தை ஆட்சி புரிந்தவர்கள் ஓரங்கட்டப்பட்டுள்ளனர். அதே 1949ல் இலங்கையில் உருவான தமிழரசுக் கட்சியும் இப்போது திராவிட அரசியல் நிலைமைக்குத் தான் வந்துவிட்டது. 2001 ஜனவரியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கி அதன் நாடாளுமன்ற குழுத்தலைவர் பதவியை மூத்த தமிழ்க் கட்சி என்ற நிலையில் தமிழரசுக் கட்சிக்கு வழங்கியது. அதுவே ,ன்றுவரை அக்கட்சிக்கான பிராணவாயுவாக (லைஃப் சப்போர்ட்) இருந்து வருகிறது. எவ்வளவு காலத்துக்கு பிராணவாயு வழங்கி ஒன்றை தக்க வைத்திருக்க முடியும்' என்று விளங்கும் மொழியில் கூறினார்.

திராவிட மாயையை ஒழிக்க தமிழகத்தில் ஒரு விஜய் வந்தது போன்று, தமிழ்த் தேசியத்தை பாதுகாத்து முன்னெடுக்க ஒருவர் எப்போது வருவார்? இதற்குக் காத்திருக்க நேருமாயின் உள்ளிருப்பவர்களே கச்சிதமாக தமிழரசுக் கட்சியை முடித்து விடுவார்கள் என்றார் ஆய்ந்தோய்ந்து நோக்கும் அந்தப் பல்கலைக்கழக விரிவுரையாளர்.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

16 மே 2026 முதல் 29 மே 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ் வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 18வது ஆண்டு நினைவஞ்சலி



### சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்டிருந்த முன்னாள் யாழ்மாநகரசபை முதல்வர் சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 18வது ஆண்டு நினைவு நாள் 08 மே 2026வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்தம்பி நாகராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு, பாரதி, செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மனோண்மணி பாலசுந்தரம்

கிழக்கிலங்கை கோமாரியைப் பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய முன்னாள் ஆசிரியை திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 29 ஏப்ரல் 2026 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி இராசையா ருக்மணி

கரம்பன் தெற்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த ரூபா என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி இராசையா ருக்மணி அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 09 மே 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள் திருமதி இராசையா ருக்மணி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## நினைவழியா நினைவுகளோடு...



### திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம்

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.இந்துமகளிர் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது நினைவழியா நினைவுகளோடு அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 28 ஏப்ரல் 2026 செவ்வாய்க்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 60வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை பாலசிங்கம்

புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த பொறளை பாலன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கனகசபை பாலசிங்கம் அவர்களின் 60வது ஆண்டு நினைவுநாள் 16 மே 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கனகசபை பாலசிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி குலோறி செல்வநிதி தவரட்ணம்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி குலோறி செல்வநிதி தவரட்ணம் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 10 மே 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி குலோறி செல்வநிதி தவரட்ணம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



10 மே 2026 ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்வநிதி குலோறி தவரெட்ணம் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 மே 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலா பவானி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாகித்தியன் பாலா அவர்களது 30வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சாகித்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



11 மே 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலா பவானி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாகித்தியன் பாலா அவர்களது 30வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சாகித்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



11 மே 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலா பவானி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாகித்தியன் பாலா அவர்களது 30வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சாகித்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



13 மே 2026 புதன்கிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஸ்ரீரங்கநாதன் கந்தசாமி அவர்களது 6வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




13 மே 2026 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி சௌமியா கோணேஸ்வரனின் 23வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சௌமியா தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




15 மே 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தம்பிராஜா பரமேஸ்வரி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 மே 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தம்பிராஜா பரமேஸ்வரி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 மே 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தம்பிராஜா பரமேஸ்வரி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



16 மே 2026 சனிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



16 மே 2026 சனிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைச் சேர்ந்த பொறளை பாலன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கனகசபை பாலசிங்கம் அவர்களது 60வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




# தமிழகத் தேர்தலும் நாமும்

தமிழ்நாட்டில் நடந்த தேர்தல் ஈழத் தமிழர்கள் மத்தியிலும் விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினர் சீமானின் அபிமானிகள். இன்னொரு பகுதியினர் விஜயை ஆதரிக்கிறார்கள்.லண்டனில் சீமானின் வெற்றியை வேண்டி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.அவருடைய கட் அவுட் அங்கே நிறுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்திலும் திருநெல்வேலி நல்லூர் போன்ற சந்ததிகளிலும் வேறு சில சந்திகளிலும் சீமானின் கட் அவுட்கள் நிறுவப்பட்டுள்ளன. மானிப்பாயில் சீமானை ஆதரித்து மாட்டுவண்டில் ஊர்வலம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. சீமானுக்கு மட்டுமல்ல விஜேக்கும் ஸ்டாலினுக்கும் பதாதைகளை கட்டப்பட்டன.

சீமான் கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரையும் அந்த இயக்கத்தின் தலைவருடைய முகத்தையும் சின்னங்களையும் தொடர்ச்சியாக தன் அரசியலுக்கு அடித்தளமாக பயன்படுத்தி வருகிறார். ஈழத்தமிழர்கள் தொடர்பில், 2009இற்குப் பின்னரான தமிழகக் கூட்டு உளவியலில் காணப்படும் குற்றவுணர்ச்சிக்கு அவர் தலைமை தாங்க முயற்சிக்கிறார். அதன் மூலம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தப் பிராந்தியத்திலேயே விடுதலைப் புலிகளின் பெயரை தொடர்ந்து பகிரங்கமாக, பயமின்றி உச்சரிக்கும் ஒருவராக அவர் பார்க்கப்படுகிறார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் தடை உண்டு. வெளிப்படையாக அந்த இயக்கத்தை ஆதரித்தாலோ அல்லது அந்த இயக்கத்தின் இலட்சியங்களை பகிரங்கமாக நேரடியாக மேலுயர்த்தினாலோ இந்தியச் சட்டங்கள் குறிப்பிட்ட நபரின் மீது அல்லது அமைப்பின் மீது பாயும். எனினும் சீமான் அந்த அமைப்பை நினைவுபடுத்தும் முகங்களையும் சின்னங்களையும் கோஷங்களையும் தொடர்ந்தும் அரசியல் மேடையில் பேசு பொருளாக வைத்திருக்கிறார்.

அதில் அவர் துணிந்து ரிஸ்க் எடுக்கிறார் என்று ஈழத்தமிழர்களில் ஒரு பகுதியினர் நம்புகிறார்கள். அதனாலேயே அவரை ஆதரிக்கிறார்கள். அதேசமயம் அவரை எதிர்ப்பவர்கள் கேட்கிறார்கள், இந்தியாவின் சட்டத் தடையை மீறி எப்படி சீமானால் இப்படி வெளிப்படையாக விடுதலைப் புலிககளை ஆதரிக்க முடிகிறது என்று? எனினும் சீமானின் விசுவாசிகள் மேற்கண்ட கேள்வியைப் பொருட்படுத்துவதில்லை.

கிடைக்கும் தகவல்களின்படி சுவிற்சர்சலாந்தில் மட்டும் சீமானின் தேர்தல் தேவைகளுக்காக கிட்டத்தட்ட 8லட்சம் சுவிஸ் பிராங்குகள் சேகரித்து அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது இலங்கைக் காசில் எவ்வளவு தொகை? அது போல ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் ஏனைய மேற்கத்திய நாடுகளிலும் சீமானுக்கு காசு திரள்கிறது.

சீமான் தனது உள்நாட்டு அரசியல் எதிரிகளை எதிர்கொள்வதற்காக சில சமயங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சின்னங்களையும் முகங்களையும் ஒரு கேடயமாக முன்நிறுத்துவார். அப்பொழுது அவருக்கு மட்டும் அடி விழாது அந்த இயக்கத்துக்கும் சேர்ந்து விழும்.

தொகுத்துப் பார்த்தால் சீமானுக்கு ஈழத் தமிழர்கள் மத்தியில் கிடைக்கும் ஆதரவு என்பது பெருமளவுக்கு அவருடைய விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டின் வழி கிடைத்ததுதான். மேலும் சீமானின் தற்சார்பு பொருளாதாரம், மக்கள் நேய பொருளாதாரம், பசுமை பொருளாதாரம் போன்று கொள்கைகள் காரணமாகவும் அவருக்கு ஆதரவு உண்டு.

அதேசமயம் நடிகர் விஜய்யின் விசிறிகளும் அவருடைய வெற்றியை ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறார்கள். இந்த ஆதரவு கொள்கை வழிபட்டது அல்ல. விஜய் ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் அவ்வப்போது தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையிலானதும் அல்ல. அது பெருமளவுக்கு சினிமா ரசிக மனோநிலையில்



இருந்து வருவது.தமது அபிமான திரை நாயகன் ஓர் அரசியல் தலைவராகவும் வெற்றிபெற வேண்டும் என்று அவருடைய விசிறிகள் எதிர்பார்க்கிறார்கள். சீமானை ஆதரிப்பவர்களைப் போல இவர்களிடம் கொள்கை ரீதியான நிலைப்பாடுகள் கிடையாது

தமிழகத்தில் நடக்கும் ஒரு தேர்தலில் இவ்வாறு இரண்டு தமிழக வேட்பாளர்களை அவர்களுடைய கட்சிகளை ஈழத்தமிழர்கள் ஆதரிப்பது என்பது 2009க்கு பின்னரான வளர்ந்து வரும் ஒரு போக்கு தாங்கள் வாக்களிக்க முடியாத ஒரு தேர்தலுக்காக உழைப்பது?

இதற்கு முன்னரும் திராவிட கட்சிகளுக்கு ஈழத்தமிழர்கள் மத்தியில் அபிமானிகள் இருந்தார்கள். திராவிட இயக்கத் தலைவர்களுக்கும் அபிமானிகள் இருந்தார்கள். குறிப்பாக எம்ஜிஆருக்கும் வைகோவிற்கும் விஜயகாந்துக்கும் ஆதரவாளர்கள் இருந்தார்கள். அவர்களும் தங்களுடைய அபிமான தலைவர்கள் வெல்ல வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் தமிழகத் தேர்தலில் ஈழத் தமிழர்கள் இவ்வளவு அதிகரித்த ஆர்வம் காட்டுவதும் அந்த ஆர்வமானது கோடிக்கணக்கான ரூபாய் உதவிகளாக திரள்வதும் கடந்த 2009க்கு பின்னரான ஒரு புதிய போக்குத்தான்.

கடந்த 16ஆண்டுகளாக ஈழத்தமிழ் அரசியலில் நிலவும் தலைமைத்துவ வெற்றிடம், அதனால் ஏற்பட்ட வெளி யாருக்காகக் காத்திருக்கும் அரசியல் என்பவற்றின் விளைவா இது?

தாம் போற்றும் ஓர் இயக்கத்தை தமிழகத்தில் உயர்த்தும் ஒருவரை ஆதரிப்பதும் அல்லது தமது அபிமான திரை நாயகரை ஆதரிப்பதும் அவரவர் விருப்பம். அவ்வாறு ஆதரிக்கவும் அவர் வெல்லவேண்டும் என்று உழைக்கவும் அவர்களுக்கு உரிமை உண்டு. அதேசமயம் ஓர் அரசியல் சமூகமாக ஈழத் தமிழர்கள் தமிழகத் தேர்தல்களில் மட்டுமில்லை,இந்திய தேர்தல்களிலும் எப்படிப்பட்ட ஒரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்?

இதில் பிரதானமாக இரண்டு வகை நிலைப்பாடுகளை எடுக்கலாம். ஒன்று கொள்கை வழி நிலைப்பாடு. இரண்டாவது தந்திரோபாய நிலைப்பாடு. கொள்கை வழி நிலைப்பாடு என்பது ஏற்கனவே இக்கட்டுரையில் கூறப்பட்டது போல கொள்கைரீதியாக ஈழத் தமிழர்களோடு நெருக்கமாகக் காணப்படும் தமிழகக் கட்சிகளை ஆதரிப்பது.தந்திரோபாய நிலைப்பாடு என்பது ஈழத் தமிழர்கள் ஒரு தேசமாக முடிவெடுப்பது. இதை இன்னும் ஆழமான வார்த்தைகளில் சொன்னால் ஓர் அரசைப் போல சிந்திப்பது.

தமிழகத்திலும் சரி முழு இந்தியாவிலும் சரி யார் தலைவராக வரவேண்டும் என்பது அங்குள்ள வாக்காளர்களின் விருப்பம். வாக்காளர்களின் விருப்பப்படி யார் தெரிவு செய்யப்படுகிறாரோ அவர் தான் அங்கே அரசியல் அதிகாரத்தின் மையத்தில் இருப்பார்.

எனவே ஒரு தேசமாக,ஒரு அரசைப் போல முடிவெடுத்தால் அந்த அதிகார மையத்தைக் கையாள வேண்டிய தேவை.அந்த அதிகார மையத்தோடு "என்கேஜ்" பண்ண வேண்டிய நிர்ப்பந்தம் ஈழத்தமிழர்களுக்கு உண்டு. இதில் தமக்கு பிடித்த தலைவர் இருக்கிறாரா, பிடித்த கட்சி இருக்கிறதா என்றெல்லாம் பார்த்து ஈழத்தமிழர்கள் உறவாட முடியாது. இந்திய மக்களும் தமிழக மக்களும் யாரைத் தெரிவு செய்கிறார்களோ, அவர்களோடு இடையூ டாடுவது. அதுதான் ராஜதந்திரம்.

கொள்கை நிலைப்பாடுகளுக்கும் ராஜதந்திர நிலைப்பாடுகளுக்கும் இடையில் ஒரு சமநிலையைப் பேண வேண்டியிருக்கும். அரசியலில் பல சந்தர்ப்பங்களில் அறம்சார்ந்த நிலைப்பாடுகளுக்கும் ராஜதந்திர நிலைப்பாடுகளுக்கும் இடையில் சமநிலையைக் காணமுடியாமல் இருக்கும். அப்பொழுது என்ன செய்வது?

உதாரணமாக தமிழ்நாட்டில் திமுக வெல்கிறது என்று வைத்துக் கொண்டால் சீமானை ஆதரிக்கும் ஈழத்தமிழர்கள் புதிய அரசாங்கத்தோடு தொடர்புகளை வைத்துக் கொள்ள மாட்டார்களா?

ஏன் அதிகம் போவான்? இப்பொழுது சீமானுக்கு கோடிகோடியாக காசைத் திரட்டும் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் பெரும்பாலான நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தடை உண்டு.அந்த நாடுகளில் அந்த அரசின் கீழேதான் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்கிறார்கள் உழைக்கிறார்கள் அதில் ஒரு பகுதியை சீமானுக்கும் கொடுக்கிறார்கள். ஈழத் தமிழ் அரசியல் தொடர்பான மேற்கு நாடுகளின் கொள்கை முடிவுகளோடு உடன்பட முடியாது என்பதற்காக யாரும் அந்த நாடுகளில் இருந்து தமது பிரஜா உரிமைகளைத் தூக்கி எறிந்து விட்டு வெளியேறுவதில்லைத் தானே?

எனவே நீதியானவர்களிடந் தான் ஈழத்தமிழர்கள் நீதியை எதிர்பார்க்கலாம் என்றால் அல்லது கொள்கை உடன்பாடு உடையவர்களோடு மட்டுந் தான் ஈழத் தமிழர்கள் உறவாடலாம் என்று சொன்னால்,அரசு இல்லாத ஈழத் தமிழர்களுக்கு உலகில் எத்தனை நண்பர்கள் கிடைப்பார்கள்? அவர்களில் எத்தனை பேர் முடிவெடுக்கும் அதிகாரத்தோடு இருப்பார்கள்?

தமிழகத் தேர்தலில் ஈழத் தமிழர்கள் ஆர்வம் காட்டலாம். ஆனால் ,அங்கு யாரை தமிழக மக்கள் தேர்ந்தெடுக்கிறார்களோ அந்த அரசாங்கத்தோடு ஈழத் தமிழர்கள் ஓர் அரசியல் சமூகமாக எப்படி இடையூடாடுவது என்று சிந்திப்பதே பொருத்தமானது.

ஈழத் தமிழ் அரசியலைப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் தமிழகத்தில் உண்டு. அதனால் தான் திமுக இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வாக கூட்டாட்சியை ஆதரிக்கின்றது. விஜய் ஈழத் தமிழர்களின் அரசியலைப்பற்றி அறிக்கையிட வேண்டியுள்ளது. அந்தத் தேவையை வைத்துக்கொண்டு எப்படி புதிய தமிழக அரசுடன் இடையூடாடுவது என்று ஈழத் தமிழர்கள் சிந்திக்கலாம்.

மேலும் கடந்த பல தசாப்தகால தமிழக தேர்தல் முடிவுகளைத் தொகுத்துப் பார்த்தால் ஒருவிடயம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஈழ ஆதரவு நிலைப்பாடு என்பது தமிழகத் தேர்தல்களில் ஒரு பிரதான தீர்மானிக்கும் சக்தி இல்லை என்பது தான். அவ்வாறு ஈழத்தமிழர்களுக்காக துணிச்சலான முடிவுகளை எடுத்த பல தலைவர்கள் தமிழ்நாட்டில் தேர்தலில் வெற்றி பெறவில்லை. எனவே தமிழகத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர் எவ்வளவு தீவிரமாக ஈழத்தமிழ் ஆதரவு நிலைப்பாட்டிக் கொண்டிருந்தாலும் அவரால் ஈழத் தமிழர்களுக்கு தனி நாட்டை வாங்கிக் கொடுக்க முடியாது.

தனிநாடு மட்டுமல்ல 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தச் சொல்லி இலங்கை அரசாங்கத்தின் மீது குறைந்த பட்ச நிர்பந்தங்களைக் கூட பிரயோகிக்க முடியாது. பதிலாக ஈழத் தமிழர்களோடு உணர்வுபூர்வ (15ம் பக்கம் பார்க்க).

# உலகளாவிய கொந்தளிப்பு:- பொருளாதார நிச்சயமற்ற தன்மையைக் கையாள்வதில் இலங்கை எதிர்நோக்கும் சிக்கல்கள்!

ஏப்ரல் மாதத்தில் ஹோர்முஸ் நீரிணை அமெரிக்காவினதும் ஈரானினதும் `இரட்டை முற்றுகையை' தொடர்ந்து எதிர் கொண்டது. இஸ்ரேல் தெற்கு லெபனானில் ஈரானின் `பினாமி' களைத் தொடர்ந்து தாக்கி வருவதால், மேற்கு



ஆசியப் போர்களில் `போர் நிறுத்தம்' என்ற வார்த்தை அதன் அர்த்தத்தை இழந்து விட்டது.

இந்தப் போர் ஆசியாவின் பெரும் பகுதிகளில், குறிப்பாக இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் எரிசக்தி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. கோவிட்-19 காலத்திற்குப் பின்னரான பொருளாதார மீட்சிக்காக ஏற்கனவே போராடி வரும் இலங்கை, மாலைதீவு போன்ற இறக்குமதியை நம்பியிருக்கும் சிறிய நாடுகளுக்கு இது பெரும் சவாலாக அமைந்துள்ளது.

ஈரானில் அமெரிக்கா மேற்கொண்ட தலைமைத்துவத்தை அழிக்கும் (leadership decapitation) நடவடிக்கைகளால் தெஹ்ரானில் தலைமைத்துவக் குழப்பம் நிலவுகிறது. மறுபுறம், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது முழு வேகத்தில் செயல்படுவதால், ஹோர்முஸ் நீரிணையில் கடல்சார் போக்குவரத்து எப்போது வழமைக்குத் திரும்பும் என்பது எவருக்கும் தெரியவில்லை.

ஈரான் போரினால் ஏற்பட்டுள்ள உலகளாவிய கொந்தளிப்பையும் பொருளாதார நிச்சயமற்ற தன்மைகளையும் கையாள்வதில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எதிர்கொள்ளும் தற்போதைய நிலைவரம் , ஜோர்ஜ் பேர்னார்ட் ஷாவின் `மை ஃ பேயர் லேடி' (My Fair Lady) நாடகத்தில் எலிசா டூலிட்டில் கூறும் புகழ்பெற்ற வரிகளை நினைவூட்டுகிறது: `நான் பூக்களை விற்றேன். என்னை நான் விற்கவில்லை. இப்போது நீங்கள் என்னை ஒரு சீமாட்டியாக ஆக்கி விட்டீர்கள். எதையும் விற்பதற்கு நான் தகுதியற்றவளாகி விட்டேன்.'

இத்தகைய மோசமான சூழ்நிலையிலும், இலங்கை ஏப்ரல் 14 அன்று சிங்கள - தமிழ் புத்தாண்டு பண்டிகையை பாரம்பரிய சடங்குகளுடன் கொண்டாடியது. அநுர அரசாங்கம் தனது நிவாரணப் பொதியை எரிபொருள் மானியங்கள், மின்சார சலுகைகள் மற்றும் பணப் பரிமாற்றங்கள் புத்தாண்டு காலத்துடன் ஒத்திசைவாக அறிவித்தது. இது மேற்கு ஆசியப் போரின் பொருளாதார அதிர்ச்சியிலிருந்து குடிமக்களைப் பாதுகாப்பதையும் வீட்டுச் செலவுகளைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டது.

எரிபொருள், எரிசக்தி, உரம் மற்றும் நேரடி பணப் பரிமாற்றம் ஆகிய முக்கிய தட்டுப்பாடுகளைக் கொண்ட துறைகளில் இது கவனம் செலுத்துகிறது. டீசலுக்கு 100 ரூபாயும், பெட்ரோலுக்கு 20 ரூபாயும் மானியம் வழங்கப்படுகிறது. இது அரசாங்கத்திற்கு மாதத்திற்கு 20பில்லியன் ரூபா செலவை ஏற்படுத்தும். 90 யூனிட்டுகளுக்கும் குறைவாகப் பயன்படுத்தும் வீடுகளுக்கு மூன்று மாதங்களுக்கு மின்சார சலுகைகள் வழங்கப்படுகின்றன.

எரிபொருளை ஒப்புரவாக விநியோகிப்பதை உறுதி செய்வதற்காக வாகன வகைகளின் அடிப்படையில் வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை வரையறுக்கும் கியூ.ஆர். குறியீடு அடிப்படையிலான விநியோக முறையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது. எரிசக்தியைச் சேமிக்க தற்காலிகமாக 4 நாள் வேலை வாரம் அறிமுகப்படுத்தப்பட்டது இருப்பினும் பின்னர் அது மீண்டும் 5 நாட்களாக அதிகரிக்கப்பட்டு விட்டது.

கடந்த மாதம், இலங்கைக்கு இந்தியாவிலிருந்து 38,000 மெட்ரிக் தொன் எரிபொருள் (20,000 மெட்ரிக் தொன் டீசல் 18,000 மெட்ரிக் தொன் பெட்ரோல்) அவசர விநியோகமாகக் கிடைத்தது. அரசாங்கம் தற்போது ரஷ்யாவுடனும் சீனாவுடனும் எரிபொருள், எரிவாயு, நிலக்கரி மற்றும் உர விநியோகங்களைப் பெற்றுக் கொள்ளவதற்கான பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

விநியோகச் சங்கிலிகளைக் கண்காணிக்கவும் நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் ஒரு `பொருளாதார கண்காணிப்புக் குழு' (Economic Monitoring Committee) அமைக்கப்பட்டுள்ளது. பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்காக, மத்திய வங்கி 700 மில்லியன் அமெரிக்க டாலர் களைக் கொள்வனவு செய்து, அந்நியச் செலாவணி இருப்பை சுமார் 7 பில்லியன் டாலர்களாக வலுப்படுத்தியுள்ளது.

இந்த நிவாரணப் பொதி, 2022 நெருக்கடி நாட்களில் இருந்து நடைமுறையில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டாலர் திட்டத்துடன் ஒத்துப்போகிறது.

இலங்கையின் தற்போதைய அணுகுமுறை குறுகிய கால நிவாரணங்களையும் (மானியங்கள்), நீண்ட கால ஸ்திரத்தன்மையையும் (எரிசக்தி இராஜதந்திரம், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம்) இணைக்கிறது. நிதி மீட்சியைப் பாதிக்காமல் குடிமக்களைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாகத் தெரிகிறது. ஆனால், எரிபொருள் மற்றும் மின்சாரத் துறையில் அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டுமானால் நம்பகமான வெளிப்புற எரிசக்தி விநியோகத்தை உறுதிப்படுத்துவதும் பொருளாதார நிர்வாகத்தில் நம்பிக்கையைத் தக்க வைப்பதும் அவசியமாகும். இது 2020-2022 கோவிட் காலப்பகுதியில் கோட்டாபய ராஜபக்ச மேற்கொண்ட நடவடிக்கைகளில் இருந்து மாறுபடுகிறது. கோட்டாபய உள்நாட்டு நிதிச் சலுகைகள் மற்றும் கடன் நிவாரணங்களில் கவனம் செலுத்தினார், ஆனால் தற்போதைய அரசாங்கம் வெளிப்புற எரிசக்தி இராஜதந்திரத்திற்கு முன்னுரிமை அளிக்கிறது.

ஆயினும் 100 பில்லியன் ரூபா பெறுமதியான இந்த நிவாரணப் பொதியை மூன்று மாதங்களுக்கு மேல் அரசாங்கத்தால் எவ்வாறு வழங்க முடியும் என்ற கேள்வி எழுகிறது. தற்போதைய எரிபொருள் இருப்பு 2026 மே இறுதி வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குப் பின்னரான நிலைத்தன்மை ரஷ்யாவுடனும் சீனாவுடனுமான ஒப்பந்தங்களின் வெற்றியிலேயே தங்கியுள்ளது.


அமெரிக்க டொலரைச் சார்ந்திருக்கும் பாரம்பரிய முறையிலிருந்து விலகும் ஒரு மூலோபாய நகர்வாக, இலங்கையும் சீனாவும் வர்த்தகத்தை நேரடியாக ரென்மின்பி (RMB) மூலம் மேற்கொள்வதற்கான கட்டமைப்பை உருவாக்கி வருகின்றன. அண்மையில் வாஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதிய உலக வங்கி கூட்டத்தின் போது,, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவும் சீனாவின் மக்கள் வங்கி ஆளுநர் கலாநிதி பான் கோங்செங்கும் இது குறித்து விவாதித்ததாகக் கருதப்படுகிறது.

சண்டே டைம்ஸ் பத்திரிகையின் செய்தியின் பிரகாரம், இது மேற்கத்தைய வங்கிகளின் தலையீடின்றி நேரடியாக வர்த்தகத்தை மேற்கொள்ளும் ஒரு பொறிமுறையாகும். 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புதுப்பிக்கப்பட்ட 10 பில்லியன் ரென்மின் பி (சுமார் 1.4 பில்லியன் டாலர்) நாணயப் பரிமாற்ற ஒப்பந்தம் (Currency Swał) இதற்குத் தேவையான பணப் புழக்கத்தை வழங்கும். இதன் மூலம் சீனாவின் 4.3 பில்லியன் டாலர் வருடாந்த வர்த்தகத்தின் ஒரு பகுதியை ரென்மின் பி க்கு மாற்றுவதன் மூலம் இலங்கையின் டொலர் கையிருப்பு மீதான அழுத்தம் குறையும்.

2022 முதல்,இந்தியாவும் இலங்கையும் டொலர் மீதான சார்பைக் குறைக்க இந்திய ரூபாயில் வர்த்தகம் செய்யும் முறையைக் கொண்டுள்ளன. இதற்காக இலங்கை வங்கிகள் இந்திய வங்கிகளில் `சிறப்பு ரூபா வோஸ்ட்ரோ கணக்குகளை' திறந்துள்ளன. இலங்கை மத்திய வங்கி 2022 ஆகஸ்டில் இந்திய ரூபாயை ஒரு `குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு நாணயமாக' அங்கீகரித்தது. இந்தியச் சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் இந்திய ரூபாயைப் பயன்படுத்த முடியும் என்பதோடு, இலங்கையர்கள் 10,000 அமெரிக்க டொலர் மதிப்பிலான இந்திய ரூபாயை வைத்திருக்கவும் அனுமதி உண்டு.

இதன் மிகப்பெரிய நன்மையாக, இந்தியச் சுற்றுலாப் பயணிகளின் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை எளிதாக்க இந்தியா

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



வின் `யு.பி.ஐ.' (UPI) மற்றும் இலங்கையின் `லங்கா பே' ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. ஏப்ரில் மாதத்தில், இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணனின் முதல் இலங்கை விஜயத்துடன் இருநாட்டு உறவுகள் மேலும் வலுவடைந்தன. இதன்போது திருகோணமலையை பிராந்திய மையமாக மேம்படுத்துதல், 50,000 வீடுகள் அமைக்கும் திட்டம், மற்றும் புதிய பாலங்களுடன் வடக்கு ரயில் சேவையை மீட்டெடுப்பது போன்ற திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது.

கடல்சார் துறையில் ஒரு முக்கிய செய்தியாக, இந்தியாவின் முன்னணி பாதுகாப்பு கப்பல் கட்டும் தளமான மசாகன் டொக் ஷிப் பில்டர்ஸ் லிமிடெட் இலங்கையின் கொழும்பு டொக்யார்ட் பி.எல்.சி. நிறுவனத்தின் 51 சதவீத பங்குகளை சுமார் 26.8 மில்லியன் டாலர்களுக்குக் கைப்பற்றியுள்ளது. டைம்ஸ் ஆஃப் இந்தியா குறிப்பிட்டுள்ளபடி, இது சீனாவின் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 99 வருட குத்தகைக்கு எதிரான ஒரு மூலோபாய நடவடிக்கையாகும்.

கொழும்பு டொக்யார்ட் சர்வதேச கப்பல் போக்குவரத்து பாதைகளின் மையத்தில் அமைந்துள்ளதால், இந்தியாவிற்கு இது கப்பல் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பிற்கான ஒரு வெளிநாட்டுத் தளமாக அமையும்.

புத்தாண்டு அநுர குமார திஸாநாயக்கவுக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு அத்தனை சுமுகமாகத் தொடங்கவில்லை. தரமற்ற நிலக்கரி இறக்குமதி மற்றும் நிதியமைச்சின் கணினி கட்டமைப்பில் ஏற்பட்ட ஊடுருவல் (இதன் மூலம் 2.5 மில்லியன் டாலர் இழப்பு) ஆகிய இரண்டு மோசடிப் புகார்கள் `தூய்மையான' அரசாங்கத்திற்கு சவாலாக அமைந்துள்ளன.

இத்தருணத்தில் அநுர அவர்கள் புகழ்பெற்ற அமெரிக்க வாகனத் துறை நிர்வாகி லீ அயகோக்காவின் (Lee Iacocca) ஆலோசனையைப் பின்பற்றுவது சிறப்பாக இருக்கும்:

`பெரும் மன அழுத்தம் அல்லது கஷ்டமான காலங்களில், எப்போதும் வேலையில் மூழ்கியிருப்பது சிறந்தது. உங்கள் கோபத்தையும் ஆற்றலையும் நேர்மறையான ஒன்றாக மாற்ற உழையுங்கள்.'

ஜனாதிபதி ஏற்கனவே அந்த வழியில் மும்முரமாகச் செயல்படுவது போலவே தெரிகிறது.

# சட்டத்தரணிகளின் அறிவின் அறம் தமது சமூகத்தின் வாழ்வை வலுவாக்குவதே!

கட்டுரையாளர்:
- அ.வரதராஜப்பெருமாள் -

சில வாரங்களுக்கு முன்னர் தமிழர்கள் மத்தியிலுள்ள பிரபலமான கட்சிகளின் தலைவர்களுக்கும் தமிழ் சட்டத்தரணிகள் சங்க பிரமுகர்களுக்கும் இடையில் நடந்த சந்திப்பைத் தொடர்ந்து இலங்கையில் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசியற் தீர்வு காண்பதற்கான விடயங்களில் தமிழ் சட்டத்தரணிகள் சங்கத்தினரின் ஆர்வமுடன் செயற்படப் போகிறார்கள் என்றதொரு செய்தி வெளிவந்ததும் தமிழர்களிடையேயுள்ள அரசியற் செயற்பாட்டார்கள் மத்தியில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

இந்த சந்திப்பில் உண்மையாக என்ன நடந்தது. இந்தச் சந்திப்பு எதை நோக்கி முன்னேறப் போகிறது என்பன பற்றிய கற்பிதங்கள் பகிரங்கத்தில் வெவ்வேறானதாக இருக்கின்ற போதிலும் தமிழர்களுக்கான அரசியற் தீர்வு விடயத்தில் அக்கறை கொண்டோரிடையே ஒரு வகையாக நம்பிக்கை கலந்த எதிர்பார்க்கையையும் அது ஏற்படுத்தியது.

தமிழர்களின் மத்தியிலுள்ள அரசியற் கட்சிகளிடையே 'ஒற்றுமை' ஏற்பட வேண்டும் என்பது அடிக்கடி இங்கு ஒரு பேசு பொருளாக இருந்து வருகின்றது. இந்த 'ஒற்றுமை' என்ற சொல் இங்கு பொத்தாம் பொதுவாக பாவிக்கப்படுகிறதே தவிர இந்த சொல்லுக்கு திட்டவட்டமாக என்ன அரத்தம் யார் யாருக்கிடையில் ஒற்றுமை. எந்த அரசியல் சமூக கோட்பாட்டின் அடிப்படையில் ஒற்றுமை. எந்த இலக்கினை அடைவதற்கான ஒற்றுமை. எந்த கட்டமைப்பு முறையிலான ஒற்றுமை என்பன பற்றி எவரிடமும் தெளிவான கருத்து இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழர்கள் சமூகரீதியாக சிதைந்து சிதறிக் கிடக்கும் நிலை மற்றும் இப்போது தமிழர்கள் அரசியல்ரீதியாக மிகவும் கீழான பலயீனமான நிலையில் இருக்கின்றமை என்பனவற்றின் விளைவாக இவ்வாறானதொரு பொது அக்கறை தமிழர் சமூகத்தில் பரவலாக வெளிப்படுகிறதெனலாம். எனினும் தமிழ் சட்டத்தரணிகள் சங்கத்தினரும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சந்தித்தது தமிழர் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக அல்ல என்பது தெளிவாகும்.

### மேட்டு மனோநிலை கொண்டோர் கூட்டாக ஆரம்பித்துள்ள ஒரு பயணம்

1981ம் ஆண்டு வரை இலங்கைத் தமிழர்களின் தேர்தல் அரசியற் களத்தில் சட்டத்தரணிகளே செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தனர். தமிழர்களிடையே அப்போதிருந்த கட்சிகளின் தலைமைப் பிரமுகர்கள் பெரும்பாலும் சட்டத்தரணிகளாகவே இருந்தனர். நாடாளுமன்றத்திலோ அல்லது உள்ளூராட்சி சபைகளிலோ உறுப்பினர்களாக இருந்த சட்டத்தரணிகள் மற்றும் அதற்கான தேர்தல்களில் போட்டியிடும் சட்டத்தரணிகள் மட்டுமல்லாது அப்போது அரசியல் ரீதியாக அக்கறை கொண்ட சட்டத்தரணிகள் பெரும்பாலும் தாங்கள் ஆதரிக்கின்ற கட்சிகளோடு தம்மை வெளிப்படையாக அடையாளம் காட்டிக் கொள்பவர்களாக இருந்தனர் அக்கட்சிகளுக்காக பகிரங்கமாகவும் செயற்பட்டனர்.

இப்போது தமிழர்களிடையேயுள்ள சில தேர்தல் அரசியற் கட்சிகளின் தலைமை இடத்தில் சில சட்டத்தரணிகள் இருப்பினும். இக்கட்சிகளின் உறுப்புரிமைக்கு வெளியேயிருந்து கொண்டு. ஆனால் நெருங்கிய தொடர்பில் இருக்கும் சட்டத்தரணிகள் பெரும்பாலும் தாம் ஆதரிக்கும் கட்சிகளோடு தம்மை வெளிப்படையாக அடையாளம் காட்டுவதில்லை. அரசியற் கட்சிகளோடு தம்மை வெளிப்படையாக அடையாளம் காட்டாமல். ஆனால் அவற்றின் அரசியல் நிலைப்பாட்டை மறைமுகமாக நியாயப்படுத்துகிற. பட்டும் படாமலும் ஆதரித்து பிரச்சாரம் செய்கிற சட்டத்தரணிகள் சிலரை ஆங்காங்கே இங்கே காண முடிகிறது. தமது அரசியற் சிந்தனைகளோடு ஒத்துப் போகிற கட்சிகளோடு கூட சட்டத்தரணிகள் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள தயாராக இல்லாமை என்பது இலங்கைத் தமிழர்களின் அரசியலில் ஒரு விசேட அம்சமே.

### புதிதாக ஏற்பட்டுள்ள உற்சாகம் ஆக்கபூர்வமாக அமைய வேண்டும்

இதுகால வரையான தமிழர் அரசியலில். அதாவது ஆயுதக் போராட்ட காலத்திலும் சரி அதற்கு முந்திய காலத்திலும் சரி. அதற்குப் பிந்திய கடந்த 16 ஆண்டுகளிலும் சரி. தமிழர்களின் அரசியற் தீர்வு தொடர்பாக தமிழர்கள் மத்தியிலுள்ள சட்டத்தரணிகள் தாங்களாக ஒரு சட்டத்தரணிகள் குழுவாக எந்த வகையிலும் செயற்படுவதற்கு அக்கறை காட்டியதில்லை. இப்போது தமிழ் சட்டத்தரணிகள். தமது தனிப்பட்ட அரசியற் கட்சிகளுடனான தொடர்புகளுக்கு அப்பால் சட்டத்தரணிகள் குழுவாக. இவ்வளவு காலம் தாழ்த்தியேனும். தமிழர்களுக்கான அரசியற் தீர்வு தொடர்பாக தமது பங்களிப்பை செலுத்த முன்வந்திருக்கின்றமை வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. தமிழர்கள் மத்தியிலுள்ள அரசியற் கட்சிகளோடு தமிழ் சட்டத்தரணிகள் சங்கத்தினர்

- எவ்வாறு ஒரு ஸ்தாபன கட்டமைப்பு பூர்வமாக ஒருங்கிணைந்து செயற்படப் போகிறார்கள் என்பது இன்னமும் தெளிவாக இல்லை.
- அவ்வாறு ஒரு ஸ்தாபன கட்டமைப்பு பூர்வமாக செயற்படுவது சாத்தியமா?
- அதற்கான கள நிலவரம் உண்டா?
- இங்குள்ள தமிழ் அரசியற் கட்சிகளின் அணிகள் ஒவ்வொன்றும். யதார்த்த பூர்வமாக நிலவுகின்ற உண்மைகளை உணர்ந்து. தமிழர்களுக்கான அரசியற் தீர்வு தொடர்பில் ஒரு பக்க அறிக்கையைக் கூட ஒற்றுமையாக வரைந்து ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு பகைமை கொண்டவர்களாக இருக்கையில். தமிழ் சட்டத்தரணிகள் சங்கத்தினர் எவ்வாறு தமிழர்களுக்கான அரசியற் தீர்வு தொடர்பாக இந்த தமிழ்க்கட்சிகளுடன் ஒருங்கிணைந்தோர் செயற்பாட்டு அரங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளப் போகிறார்கள்? என்கின்ற தொடர் கேள்விகள் எழுகின்றன.

### இங்குள்ள தமிழ்கட்சிகள் பலவிதம் இதில் சட்டத்தரணிகள் சங்கம் எவ்விதம்?

தமிழ் அரசியற் கட்சிகள் ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட விதமாகவும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட விதமாகவும் தமிழர்களுக்கான அரசியற் தீர்வு நிலைப்பாடுகளைக் கொண்டிருப்பது தமிழர்களின் அரசியலை தொடர்ந்து பலயீனமானதாக ஆக்குகின்றதென பொதுவாக ஒரு கருத்து நிலவுகின்றது. ஆனபடியாலேயே. தமிழ் அரசியற் கட்சிகள் அனைத்தும் ஒரே அணியாகவோ அல்லது தனித்தனியாகவோ. ஒரே வகைப்பட்ட அரசியற் தீர்வை முன் வைக்க வேண்டுமென வலியுறுத்தி. அதற்கு தங்களது சட்ட அறிவை மற்றும் அனுபவங்களை பயன்படுத்தி உதவுவதற்கு. மூத்த தமிழ் சட்டத்தரணிகள் பலர் முயற்சிப்பதாக சொல்லப்படுகின்றது. இந்த தமிழ் சட்டத்தரணிகளுக்கும் தமிழ் அரசியற் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையேயான சந்திப்பின் மையக்கரு தமிழர்களுக்கான அரசியற் தீர்வு பற்றிய விடயத்தை ஒரு முகப்படுத்தல் என்பதே

அப்படியாயின். தமிழ் சட்டத்தரணிகள் சங்கத்தினர். தமிழ் அரசியற் கட்சிகளின் அரசியல் நிலைப்பாடுகளை அரவணைத்தபடி. அதேவேளை தாங்களாக தமிழர்களுக்கான ஓர் அரசியற் தீர்வு வரைவுத் திட்டத்தை தயாரித்து முன் வைப்பார்களா? என்ற கேள்வியை எழுப்பினால். அப்படியல்ல. தமிழ் அரசியற் கட்சிகள் தமிழர்களுக்கான அரசியற் தீர்வு தொடர்பாக கொள்கை ரீதியான ஓர் அரசியல் வரைபை முன் வைக்க வேண்டும் என்றும் அதற்கான சட்டரீதியாக முழுமைப்படுத்தப்பட்ட வரைபை மேற்கொள்வதற்கான வேலைத்திட்டத்தினை சட்டத்தரணிகள் சங்கம் மேற்கொள்ளும் எனவும் மூத்த தமிழ் சட்ட வல்லுனர்கள் வலியுறுத்தியிருப்பதாக அறியப்படுகிறது.

### யாழ்.படையப்பாக்களினது மட்டுமல்ல பேரன்களின் வழியும் தனி வழி தான்

இந்த விடயத்தில் திரு கஜேந்திரகுமார் அவர்களின் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் (த.தே.ம) முன்னணியைச் சேர்ந்த சட்டத்தரணிகளும் மற்றும் அந்த முன்னணியின் அரசியல் நிலைப்பாடுகளை ஆதரிக்கும் சட்டத்தரணிகளும் உடனடியாக. தமது முன்னணியின் அரசியல் வரைபை மேற்கொள்ளும் வேலைத் திட்டத்தில் இறங்கிவிட்டதாக தெரிகின்றது. எந்த வகுப்புக்குப் போனாலும் அவர்களுக்கு ஒரே பாடப் புத்தகம் தான் இலங்கையின் அரசியல் யாப்பானது (1) தமிழர்கள் ஒரு தேசம் (2) இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒருங்கே இணைந்ததே தமிழர்களின் தேசம் (3) தமிழர் தேசத்தின் மீது தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு எனும் மூன்றையும் அங்கீகரித்து அதற்கு பொருந்தியதாக. மீளப் பெற முடியாத வகையில் அதிகாரப் பிரினைகளைக் (irretrievable Division of Powers) கொண்ட சமஸ்டி அரச கட்டமைப்பே அரசியற் தீர்வு. இதுவே த.தே.ம. முன்னணியினரின் ஒரே வாய்ப்பாடு.

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் மற்றும் யாழ் மாநகர சபையின் முன்னாள் மேயர் மணிவண்ணன் ஆகியோரின் தலைமையில் அமைந்த 'தமிழ் மக்கள் கூட்டணி'யினர் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று கோருகின்ற போதிலும். தமிழர்களுக்கான அரசியற் தீர்வு விடயத்தில். ஏறத்தாழ த.தே.ம. முன்னணியினரின் அரசியல் நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றனர்.


தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் தமிழ் மக்கள் கூட்டணியினரும் 13வது திருத்தம் மூலமாக அமைந்துள்ள அதிகாரப் பகிர்வு பற்றி அதற்கான திருத்தங்கள் பற்றியோ அல்லது அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவது பற்றியோ எந்த வகையிலும் பேசத் தயாராக இல்லை. அத்துடன் இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்புக்குள் எந்த வகையிலும் தமிழர்களுக்கான ஓர் அரசியற் தீர்வு அமைய முடியாது அப்படி ஒரு தீர்வை ஏற்க முடியாது என்பதில் உறுதியாக உள்ளனர். இந்த இருவரும் தேர்தல்களுக்காக ஈருடல் கொண்டிருந்தாலும் அடிப்படையில் ஓருயிர் கொண்ட அரசியல் இணையர்களே.

இதேவேளை. தமிழரசுக் கட்சியும். ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளும் பொதுவாக வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ்த் தேசம் மற்றும் தமிழர்களின் சுயநிர்ணயம் ஆகியவற்றின் அடிப்படையிலான சமஸ்டியே முழுமையான நிரந்தரமான அரசியற் தீர்வாக அமைய முடியும் என்ற முகவுரையை தவற விடுவதில்லை. அதனோடு கூடவே. அரசியல் யாப்பில் 13வது திருத்தமாக மேற்கொள்ளப்பட்டு உள்ளடக்கப்பட்ட மாகாண ஆட்சி முறையை. முழுமையான அதிகாரங்களைக் கொண்டதாக நடைமுறைப்படுத்துவது முதலில் அவசியம் என வலியுறுத்தி வருகிறார்கள்.

### எத்தனை முறை குளிப்பாட்டினாலும் எருமைகளுக்கு சேறு தான் சுகம்

தமிழரசுக் கட்சியின் ஒற்றையாட்சி மற்றும் ஒருமித்த ஆட்சி முறை என்கிற விவாதமும். 13வது திருத்தம் உட்பட இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என இந்திய அரசிடம் முன் வைக்கும் கோரிக்கையும் ஒரு புறமிருக்க. இங்கு இவர்கள் நடைமுறையில் கடைப் பிடிக்கிற அரசியற் செயற்பாடுகளின் அடிப்படையான பண்புகள் ஒரு சமூக அரசியல் இயக்கத்திற்குரிய வகையில் காத்திர மானவைகளாக இல்லை. மாறாக மாமூலான தேர்தல் அரசியற் கட்சிகளின் விளம்பரத்தனத்தையே கொண்டிருக்கின்றன.

தமிழரசுக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தமக்கே உரிய விதத்தில்.(19ம் பக்கம் பார்க்க)



# விஜய் ரசிகர்களை எப்படி வாக்காளராக மாற்றினார்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -





விஜய் வெற்றி பெற்ற பின்.நடிகர் சத்யராஜ் சொன்னார் தமிழக அரசியலில் மக்கள் அரசியல் மயப்படுத்தப்படவில்லை. ரசிகர் மயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்'' என்று. புதுடில்லியை மையமாகக் கொண்ட அரசியல் ஆய்வாளராகிய ராஜன்குறை கிருஷ்ணன் கூறுகிறார்...தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஒரு கட்சிக்கு தேவையான கட்டமைப்புகள்.பலமான வேட்பாளர்கள் போன்ற எவையும் தேவையில்லை என்று விஜய் நிரூபித்துள்ளார் ''வேர்ச் சுவலாக''-மெய்நிகர் பரப்பில் ரசிகர்கள் மத்தியில் தன்னைக் கட்டமைத்துக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறார் என்ற பொருள்பட

விஜய் கட்சியை தொடங்கிய போது தமிழகத்தைச் சேர்ந்த ஓர் அரசியல் விமர்சகர்- அவருடைய பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் அவர் ஒரு கிறிஸ்தவர் என்பது மட்டும் அவருடைய பெயரில் இருந்து ஞாபகம் இருக்கிறது -சொன்னார். விஜய் தன்னுடைய ரசிகர்களை வாக்காளர்களாக மாற்றுவதற்கு குறிப்பிட்ட ஒரு காலகட்டம் தேவை என்று. எல்லா மாவட்டங்களிலும் அவர் ரசிகர்களை வாக்காளர்களாய் மாற்றுவதற்குரிய கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு குறைந்தது நான்கு ஆண்டுகள் எடுக்கும். எனவே உடனடியாக வரக்கூடிய தேர்தலில் அவர் முழு அளவு வெற்றியை பெறும் வாய்ப்புகள் இல்லை என்று.

விஜய் வெற்றி பெறப் போகிறார் என்பதை அக்சஸ் இந்தியாவின் கணிப்பீடு முன்கூட்டியே சொன்னது. பிரசாந்குமார் அதை அடித்துக் கூறினார். ஆனால் பெரும்பாலான தமிழக ஊடகங்களும். அரசியல் விமர்சகர்களும் அதை முன்கூட்டியே கணித்திருக்கவில்லை. அதற்கு காரணம். ஊடகங்களும் அரசியல் விமர்சகர்களும் கட்சிகளுக்கு விசுவாசமாகச் சிந்தித்தமை தான் என்று ஒரு குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகிறது.

அவ்வாறு அரசியல் விமர்சகர்கள் மற்றும் ஊடகங்களிடமிருந்த முற்சாய்வு அல்லது முற்கற்பிதம் தான் விஜயின் வெற்றியை அவர்கள் முன்கூட்டியே உணர முடியாமல் போனதற்கு காரணமா? அல்லது குறிப்பாக அரசியல் விமர்சகர்கள் வழமையான பாரம்பரிய அளவுகோல்களின் அடிப்படையில் இந்தத் தேர்தலை அணுகியது ஒரு காரணமா?

விஜய் பெற்ற வெற்றிக்கு ஜெனரேஷன் ஸற் அல்லது ஜென்சி என்று அழைக்கப்படும் புதிய தலைமுறையின் செல்வாக்கே காரணம் என்றொரு விளக்கம் உண்டு. அந்த தலைமுறையினரால் பூமர் மாமாக்கள் என்று நக்கலாகக் குறிப்பிடப்படுகின்ற நடுத்தர வயதைக் கடந்த ஒரு தலைமுறையானது இந்த ஜெனரேஷன் ஸற்றுடைய மண்டைக்குள் என்ன இருக்கிறது என்பதைச் சரியாகக் கணிக்கத் தவறியது என்றும் ஒரு விமர்சனம் முன் வைக்கப்படுகிறது.

தமிழில் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகிய ஜெயமோகன் விஜயின் வெற்றி தொடர்பாகப் பேசியுள்ளார். அதில் அவர் தர்மராஜ் என்பவர் எழுதிய ஜல்லிக்கட்டுப் போராட்டம் தொடர்பான நூலை வாசிக்குமாறு கேட்டிருக்கிறார். ஜல்லிக்கட்டு எழுச்சியை முன்னெடுத்த ஜென்சி இளையோரின் மனோநிலை தொடர்பாக தர்மராஜ் எழுதியுள்ளார். ஒரு தலைமுறை போராட்டத்தை அரசியலை களியாட்டமாகப் பார்க்கிறது. எதையும் vibe-வைஃப்-அதிர்வாக மாற்றும் ஒரு மனோநிலை.

அதாவது சோடா போல பொங்கி வெடித்து எழுவதைத்தான் அவர்கள் அரசியலாக விளங்கி வைத்திருக்கிறார்கள். சீரான தொடர்ச்சியான மாற்றங்களில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்று அந்நூலில் கூறப்படுவதை ஜெயமோகன் சுட்டிக் காட்டுகிறார். இந்தோனேசியாவில் பங்களாதேஷில் நேபாளத்தில். இலங்கையில் இடம் பெற்ற அரகலயவில்....இப்பண்பு அதிகம் காணப்பட்டதாகவும் ஜெயமோகன் தொகுத்துக் கூறுகிறார்.

தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருந்த பின்னணிக்குள் ஈழத்தமிழ் சமூக வலைத்தளங்களில் ஒரு யுடியூப்பர் பின்வரும் பொருள்பட எழுதியிருந்தார். எங்களுக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் பம்பல். ஆனால் பூமர் மாமாக்களுக்கு அது சீரியஸாகத் தெரிகிறது'' என்று

அப்படியென்றால் விஜய்க்கு விழுந்த வாக்குகள் பெரும்பாலானவை ரசிக மனோ நிலையோடு ஒரு நாயக பிம்பத்தை நோக்கி குவிக்கப்பட்ட வாக்குகளா? தமிழகத்தில் மதுரவாயில் பகுதியில் வசிக்கும் ஓர் ஈழத் தமிழர் சொன்னார். தான் கடைக்குப் பொருள் வாங்கப் போனபோது அங்கிருந்த தமிழக வாக்காளர்களோடு உரையாடியதாக. யாருக்கு வாக்களித்தீர்கள் என்று கேட்டபோது விசிலுக்கு'' என்று கூறியிருக்கிறார்கள்.'' உங்களுடைய தொகுதியில் யார் வேட்பாளர்?'' என்று கேட்டபோது அவர்களுக்குத் தெரியவில்லை. பெரும்பாலான ஆய்வாளர்கள் இப்பொழுது அதைச் சுட்டிக் காட்டுகிறார்கள். தமது தொகுதி வேட்பாளர் யார் என்று தெரியாமலே வாக்களித்திருக்கிறார்கள்.

விஜயின் வேட்பாளர்களில் அனேகமானவர்கள் ஏற்கனவே பெரிய அளவுக்கு பிரபல்யமானவர்கள் அல்ல. இம்முறை தேர்தலில் ஒரு முக்கியமான மாற்றம் நிகழ்ந்திருக்கிறது என்பதையும் விமர்சகர் சுட்டிக் காட்டுகிறார்கள். விஜயின் வேட்பாளர்களில் பலர் பெரியளவுக்குக் காசைக் கொட்டி வெற்றி பெறவில்லை. காச கொடுத்து வெல்லலாம் என்ற ஏற்கனவே இருந்து வந்த தமிழக தேர்தல் பாரம்பரியத்தை விஜயின் ஒருபகுதி வேட்பாளர்கள் உடைத்திருக்கிறார்கள். விஜய் தன்னுடைய தேர்தல் பிரச்சார உரைகளில் அதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். யார் தந்தாலும் காசை வாங்குங்கள். ஆனால் வாக்குகளை விசிலுக்குக் கொடுங்கள் என்று.

தமது தொகுதி வேட்பாளர் யார் என்று தெரியாமலேயே விஜய்க்குத் தமிழக மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு இரண்டு பிரதான காரணங்கள் தான் இருக்கலாம். ஒன்று. ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டபடி இலத்திரனியல் பிரஜைகளின் செல்வாக்கு. அவர்கள் தங்கள் வீடுகளில் உள்ள மூத்தவர்களை விஜய்க்கு வாக்களிக்குமாறு தூண்டியதோடு தாங்களும் வாக்களித்திருக்கிறார்கள்.

இரண்டாவது ஆளுங்கட்சிக்கு எதிரான அதிருப்தி. கிட்டத்தட்ட 60 ஆண்டு கால திராவிட ஆட்சிகளின் மீதான அதிருப்தி. இந்த மாற்றத்தை தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது உணர்ந்ததாக சினிமா இயக்குனராகிய தங்கர் பச்சான் தனது முகநூல் தளத்தில் தேர்தலுக்கு முன்னரே பதிவிட்டிருந்தார். தங்கர்பச்சான் வேறு ஒரு கட்சிக்காகப் பிரச்சாரம் செய்தவர்.

இவ்வாறு திராவிட மொடலுக்கு மாற்றாக தமிழக வாக்காளர்கள் விஜயைப் பார்த்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்களுக்கு ஒரு மாற்றம் தேவைப்பட்டிருக்கிறது.அ தன் விளைவாக இதுவரை காலமும் தமிழக அரசியலில் நிலவிய இருமுனைப் போட்டி இப்பொழுது மும்முனைப் போட்டியாக மாறியிருக்கிறது.

அதேசமயம் திரைத்துறைக் கூடாகக் கட்டியெழுப்பப்பட்ட ஒரு நாயக பிம்பத்துக்குக் கிடைத்த வெற்றி அது என்று தெரிகிறது. இனி விஜய். தான் ஒரு திரை நாயகன் மட்டுமல்ல. தனக்கு வாக்களித்த மக்களுக்குப் பொறுப்புக்கூறும் ஒரு தலைவனும் தான் என்பதனை நிரூபிக்க வேண்டியிருக்கும். எம்ஜிஆர் அதை நிருபித்தார். விஜய் நிருபிப்பாரா?

எம்ஜிஆர் அரசியலில் பெற்ற வெற்றிகளின் அடுத்த கட்ட வெற்றி தான் ஜெயலலிதா. இப்பொழுது விஜய். என்று ராஜன்குறை கூறுகிறார். எம்ஜிஆரின் காலத்தில் சமூக வலைத்தளங்கள் இருக்கவில்லை. கட்சியைக் கட்டியெழுப்புவதற்கு எம்.ஜி.ஆருக்கு ஐந்து ஆண்டுகள் எடுத்தன. ஆனால் விஜய் 26 மாதங்களில் அதைச் செய்திருக்கிறாரா?

பாரம்பரிய அளவுகோள்களின் மூலம் அவரை அளந்த விமர்சகர்கள் பலரும் அவர் இக்குறுகிய காலகட்டத்திற்குள் தன் கட்சிக் கட்டமைப்புகளைக் கட்டியெழுப்ப முடியாது என்று ஒரு வழமையான கணக்கை முன்வைத்தார்கள். அது பௌதீக ரீதியாக பிழை அல்ல. ஆனால் அதைவிட மேலதிகமாக ஒன்று வெற்றியை தீர்மானிக்கும் காரணிகளில் முக்கியமானதாக இருந்திருக்கிறது என்பதைத்தான் விஜயின் வெற்றி உணர்த்துகிறது.

விஜய் மிகக் குறுகிய காலகட்டத்திற்குள் தன் கட்சியைக் கட்டியெழுப்பவில்லை என்று ஒரு பகுதி தமிழக அவதானிகள் கூறுகிறார்கள். அவர் கட்சி தொடங்குவதற்கு முன்னரே மக்கள் நலன்புரி அமைப்பு ஒன்றை வைத்திருந்தார் என்றும். அதனை அவர் ஒரு கட்சிக்குரிய கருநிலைக் கட்டமைப்பாக ஏற்கனவே கட்டியெழுப்பி வைத்திருந்தார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். தவிர கடந்த சில தசாப்தங்களாக தன்னை ஓர் அரசியல் இரட்சகராகச் சித்தரிக்கும் நாயக பிம்பத்தை தனது திரைப் படங்கள் ஊடாக அவர் திட்டமிட்டு படிப்படியாக கட்டமைத்து வந்தார் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

தமிழகத்தின் கூட்டு உளவியலை அடிப்படையாக வைத்துக் கூறின். எனவே விஜயின் வெற்றி தற்செயலானதோ அல்லது திடீரென்று ஏற்பட்ட ஒன்றோ அல்ல என்றும் அவர்கள் கூறுகிறார்கள். விஜய் அதற்காக பல தசாப்தங்கள் திட்டமிட்டு உழைத்திருக்கிறார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

யார் எதைக் கூறினாலும் தேர்தல் முடிவுகளைக் குறித்த பாரம்பரிய அளவுகோள்களால் விஜய்க்குள்ள மக்கள் ஆதரவை சரியாக மதிப்பிட முடியவில்லை என்பது மட்டும் உண்மை. குறைந்தபட்சம் திராவிட கட்சிகள் மீது தமிழக மக்களுக்கு உள்ளுறையும் வெறுப்பு உண்டு என்பதனையும் ஊடகங்களும் விமர்சகர்களும் பெரிய அளவுக்கு கண்டு கொள்ளவில்லையா?

கூட்டத்துக்கு வரும் எல்லாரும் வாக்காளர்களாக மாறுவதில்லை என்ற பாரம்பரிய நம்பிக்கைகள் பொய்த்த இடம் எது? ரசிகர்கள் எல்லாரும் வாக்காளர்களாக மாறுவதில்லை என்ற பாரம்பரிய நம்பிக்கைகள் பொய்த்த இடம் எது? மக்களை அரசியல் மயப்படுத்துவது. அமைப்பாக்குவது தொடர்பான பாரம்பரிய நம்பிக்கைகள் பொய்த்த இடம் எது? திராவிட மொடல் மீது தமிழக மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியா? அல்லது ஆய்வாளர்களின் அளவுகோள்களுக்குள் வராத இலத்திரனியல் உளவியலா?

# தமிழகத் தேர்தலும் நாமும்

(12ம் பக்கத் தொடர்ச்சி) கூட்டொருமைப்பாட்டை வெளிப்படுத்தலாம். தமிழகம் கொந்தளித்தால் அது புதுடில்லியில் எதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்திய அரைக் கூட்டாட்சிக் கட்டமைப்பிற்குள்(quasi-federal state) வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட ஒரு மாநில முதலமைச்சர் என்ன செய்யலாம் என்பதில் அடிப்படையான வரையறைகள் உண்டு.

தமிழகத்தில் மட்டுமல்ல. ஈழத்தமிழர்கள் அதிக தொகையாக புலம்பெயர்ந்து வாழும் கனடாவிலும் நிலைமை இதுதான். கனடாவில் அமைச்சராக இருக்கும் ஹரி ஆனந்தசங்கரி அங்கே ஈழத்தமிழராக முடிவெடுக்க முடியுமா? அல்லது கனேடிய அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளின் அடிப்படையில் முடிவெடுக்க வேண்டுமா?

எனவே தமிழகத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அது தமிழக மக்களின் விருப்பம் என்பதை ஈழத்தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய தமிழக அரசாங்கத்தோடு எப்படி இடையூடாடுவது என்று சிந்திக்க வேண்டும்


SWARA SANGAMAM
2026
Sparkline
ENTERTAINMENT INC.
PASS
Selva's
SHASTHRA BAND
PICKERING CASINO RESORT
June 06, 2026 | 6:01 PM
(647) 336-5529
sparklinecanada@gmail.com
Exclusive Media Partner
மகிழ்ச்சி
www.MAKILCHI.ca
Premier
Healthcare Network
102.7
east FM தமிழ்
வெற்றிகொள் தமிழா!
Ramanan
தமிழன் வழிகாட்டி
ஈழநாடு
DON VALLEY NORTH
TOYOTA
Senior Sales & Lease Consultant
Jega Kanapathypillai
ELITE MD AESTHETICS
MEDICAL, COSMETIC & LASER CLINIC
SHAN THAYAPARAN TEAM
KARTHIKA SUPERMARKET
Conditions apply * All rights reserved by Sparkline Entertainment Inc.

# விஜய் என்ன தருவார்?

இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாகக் காணப்படும் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக வரக் கூடிய ஒருவரின் தேர்தல் வெற்றியை அவருடைய குடும்பத்தில் உள்ள மூத்தவர்கள், சிறியவர்கள், குழந்தைகள் உட்பட அனைவரும் விசில் ஊதிக் கொண்டாடிய காட்சி தமிழகத்தில் மட்டும்தான் இடம் பெறுமா? அல்லது உலகில் வேறு எங்காவது இடம் பெற்றதுண்டா ?

தாங்கள் வாக்களிக்க முடியாத ஒரு தேர்தல் களத்தில் முதலீடு செய்யும் ஈழத் தமிழர்களைப் போல அரசற்ற மக்கள் கூட்டங்கள் உலகில் வேறு எங்காவது உண்டா?

அயல்நாடு ஒன்றில் தெரிவு செய்யப்பட்ட ஒரு முதலமைச்சருக்காக ஒரு நாட்டின் நாடாளுமன்றத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள் எதிர்பார்ப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அந்த அயல்நாட்டு முதலமைச்சர் கச்சதீவையும் மீட்டுத் தருவார் யாழ்ப்பாணத்தை இந்தியாவுடன் இணைப்பார் என்ற பொருள்பட நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருக்கிறார்.

அதேசமயம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, கொழும்பில் உலகளாவிய புத்தாக்கம் மற்றும் தலைமைத்துவ மாநாட்டில் உரையாற்றும்போது, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தரைவழிப் பாலம் ஒன்றை அமைக்கும் திட்டத்தைக் குறித்து மீண்டும் வலியுறுத்திப் பேசியுள்ளார்.

பாக்கு நீரிணைக்குக் குறுக்கே ஒரு பாலம் அல்லது சுரங்கப்பாதை வழியாக தரைவழி இணைப்பு ஏற்படுத்துவது குறித்து பல தசாப்தங்களாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. உலகம் முழுவதும் இது போன்ற வழித் தடங்களுக்குப் போதுமான எடுத்துக் காட்டுகள் உள்ளன. அதன் பொறியியல் நன்கு அறியப்பட்டுள்ளது. அதன் பொருளாதாரம் கவர்ச்சிகரமானது. இது போன்ற பாலங்கள் எங்கு கட்டப்பட்டிருந்தாலும், அதன் நன்மைகள் மறுக்க முடியாதவை. ஆனால் நாம் தொடர்ந்து தயங்குகின்றோம். ஆதனால் நான் தெளிவாகச் சொல்கின்றேன், தயக்கம் காட்டிக் கொண்டிருப்பதற்கான காலம் முடிந்து விட்டது.

மேற்கண்டவாறு கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் உரை நிகழ்த்திய அதே காலப்பகுதியில்.மூன்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சருக்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழ் பகுதிகளில் விஜய்யின் ரசிகர்கள் அவருடைய வெற்றியை அமோகமாகக் கொண்டாடுகிறார்கள். கொண்டாட்டங்களில் அவர்கள் யுடியூப்பர்களுக்கும் ஊடகங்களுக்கும் தெரிவிக்கும் கருத்துக்கள் தாங்க முடியாதவைகளாக இருக்கின்றன. எமது தமிழ்க் கட்சிகள் தமிழ் இளையோரை அரசியல் மயப்படுத்துவதற்காக எவ்வளவு கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும் என்பதை அவை காட்டுகின்றன

அவர்கள் ரசிகர்கள் அப்படித்தான் கதைப்பார்கள். தமிழ்நாட்டிலும் அப்படித் தான் ரசிகர்கள் கதைக்கிறார்கள். ஆனால் ஈழத் தமிழ் ரசிகர்கள் தமிழ்நாட்டில் யார் முதலமைச்சராக வர வேண்டும் என்பதனை தீர்மானிக்க முடியாது.மாறாக தமிழக ரசிகர்கள் தீர்மானிக்கலாம். அதனால் தான் விஜய் வென்றிருக்கிறார்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக யார் வர வேண்டும் என்பதை தமிழக மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். அது அவர்களுடைய விருப்பத் தெரிவு. இதில் அயலவர்களாகிய ஈழத் தமிழர்கள் என்ன செய்யலாம்?

யார் முதலமைச்சராக வந்தாலும் ஈழத் தமிழர்கள் அவரோடு தமது நலன் சார்ந்து இடையூடாட வேண்டும். தமிழகத்துக்கு யார் முதலமைச்சர் என்பது தமிழக மக்களின் விருப்பம். அந்த விருப்பத்தை ஈழத் தமிழர்கள் மதிக்க வேண்டும். அந்த அடிப்படையில் தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சரோடு ஈழத்தமிழர்கள் தமது நலன்சார் நோக்கு நிலையில் இருந்து இடையூடாட வேண்டும். அப்படித்தான் புதுடில்லியில் யார் ஆட்சிக்கு வந்தாலும், ஈழத்தமிழர்கள் அந்த ஆட்சியோடு இடையூடாட வேண்டும்.



தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சர் இந்திய மாநிலம் ஒன்றின் முதலமைச்சர். அவர் இந்தியாவின் அரைச் சமஷ்ரி (Quasi-federal) அரசியலமைப்புக்கு உட்பட்டவர். இந்தியாவின் அரசியலமைப்பின்படி அவர் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளில் எதுவரை தலையிடலாம் என்பதில், எதுவரை செல்வாக்குச் செலுத்தலாம் என்பதில் அடிப்படையான வரையறைகள் உண்டு. எனவே ஈழத் தமிழர்கள் தொடர்பான இந்தியாவின் கொள்கைகளில் ஒரு தமிழ்நாட்டு முதலமைச்சர் எந்தளவுக்கு மாற்றங்களை ஏற்படுத்தலாம்? இதற்கு எம்ஜிஆர் ஒரு சிறந்த உதாரணம். எம்ஜிஆர் செய்ய முடியாத ஒன்றை எந்த ஒரு முதலமைச்சரும் ஈழத் தமிழர்களுக்கு செய்து விட முடியுமா?

எம்ஜிஆர் தமிழகத்தின் பலமான ஒரு முதலமைச்சராக இருந்தவர். அவருடைய காலத்தில் தான் முதலாங் கட்ட ஈழப்போர் நடந்தது. அக்காலகட்டத்தில் தான் ஈழ விடுதலை இயக்கங்களுக்கு தமிழ்நாடு பின்தளமாகத் திறக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் எம்ஜிஆருக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவருக்கும் இடையிலான நட்பு வளர்ந்தது. அது ஓர் அரசியல் உறவு என்பதற்கும்மப்பால் தனிப்பட்ட நெருக்கமாக வளர்ந்தது.



எம்ஜிஆர் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு என்னென்ன உதவிகள் செய்தார் என்பதனை அந்த இயக்கத்தின் மூத்த உறுப்பினர்கள் வெளிப்படையாகச் சொன்னால் தான் தெரியவரும். தமிழகத்தின் முதலமைச்சராக அவர் தன்னுடைய அதிகாரத்துக்கு அப்பாற்பட்டு உத்தியோகப்பற்றற்ற விதத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அள்ளி வழங்கியதாகத் தகவல்கள் உண்டு. அவருக்கும் அந்த இயக்கத்துக்கும் இடையிலான தனிப்பட்ட நெருக்கந்தான் பின்னாளில் அந்த இயக்கத்துக்கும் கலைஞர் கருணாநிதிக்கும் இடையிலான உறவின் தன்மையையும் தீர்மானித்தது என்று சொல்லலாம்.


முதலாங் கட்ட ஈழப்போரின் முடிவில், இந்திய-இலங்கை உடன்படிக்கை உருவாக்கப்பட்ட காலகட்டத்தில், எம்ஜிஆர் நோயாளியாகி விட்டார். எழுந்து நடக்கச் சிரமப்பட்டார். இந்திய-இலங்கை உடன்படிக்கை எழுதப்பட்ட பின் அது தொடர்பான எதிர்ப்புக்கள், சர்ச்சைகள், விமர்சனங்களின் மத்தியில் தமிழகத்தில் ஒரு பெரிய கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அக்கூட்டத்திற்கு எம்ஜிஆர் அழைத்து வரப்பட்டிருந்தார். மேடையில் பேசிக் கொண்டிருந்த ராஜீவ் காந்தி ஒரு கட்டத்தில் எம்ஜிஆரை கைத்தாங்கலாக மக்கள் முன் அழைத்து வந்தார். எம்ஜியாருடைய கையை தன்னுடைய கையினால் தூக்கி உயர்த்திப் பிடித்து இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு எம்ஜிஆரும் சம்மதம் என்று பொருள் கொள்ளத்தக்க விதத்தில் எம்ஜிஆரின் கையை தன்னுடைய கையோடு சேர்த்து அசைத்தார். தான் மிகவும் நேசித்த ஓர் இயக்கம், தன்னால் ஊட்டி வளர்க்கப்பட்ட ஓர் இயக்கம், தன்னுடைய இறுதிக் காலத்தில் தன்னுடைய நாட்டுப் படையினரோடு மோதும் ஒரு நிலைமை உருவாகி வருவதை எம்ஜிஆர் தடுக்க முடியாதவராக பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களே அவரைப் போல விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நெருக்கமாகச் சிந்திக்கவில்லை.

யாழ் நகரம் இந்திய அமைதி காக்கும் படையினரிடம் வீழ்ச்சியுற்ற இரண்டு மாதங்களில், 1987 டிசம்பர் 24 ஆம் தேதி எம்ஜிஆர் உலகை நீத்தார். எம்ஜிஆரால் முடியாத ஒன்றை இனி எந்த ஒரு முதலமைச்சரும் செய்துவிட முடியாது என்பது தான் தமிழக யதார்த்தம்.


ஏனென்றால் எம்.ஜி.ஆர் தமிழகத்தின் அதாவது இந்தியாவின் ஒரு மாநிலத்தின் முதலமைச்சர். அதேசமயம் ஈழ விடுதலை இயக்கம் ஒன்றின் தலைவருக்கு தனிப்பட்ட முறையில் மிக நெருக்கமானவர்.தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தாயகத்துக்கு வெளியே அதிகம் உதவிய ஓர் அரசியல் தலைவராக அவரைத்தான் குறிப்பிடலாம். அப்படிப்பட்ட எம்.ஜி. ஆராலேயே இந்திய-இலங்கை உடன்படிக்கை மீது நிர்ணயகரமான விதத்தில் செல்வாக்குச் செலுத்த முடியவில்லை. அந்த உடன்படிக்கையின் பின்னரான விளைவுகளைக் கட்டுப்படுத்தவும் முடியவில்லை .

இந்தியாவின் அரைச் சமஸ்டிக் கட்டமைப்புக்குள் அங்குள்ள மாநிலம் ஒன்றின் முதலமைச்சரால் உத்தியோகபூர்வமாக செய்யக் கூடியது அவ்வளவுதான்.அதேசமயம் தமிழ்நாட்டு வெகுசனம் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகக் கொந்தளித்தால், அது அந்த மாநிலத்தின் முதலமைச்சருக்கு நிர்ப்பந்தங்களைக் கொடுக்கும். அது புதுடில்லி மீது தமிழகம் கொடுக்கக்கூடிய நிர்பந்தங்களைத் தீர்மானிக்கும். ஆனால் அங்கேயும் ஒரு முன்நிபந்தனை உண்டு. ஈழத் தமிழர்கள் கொந்தளிக்காமல் தமிழகம் எப்படிக் கொந்தளிக்கும்? ஈழத் தமிழர்கள் தங்களுடைய அரசியல் இலக்குகளுக்காக தங்கள்தான் போராட வேண்டும் தாங்கள் தான் நொதிக்க வேண்டும் தாங்கள் தான் கொந்தளிக்க வேண்டும். ஈழத் தமிழர்கள் தங்களுக்காக தாங்கள்தான் போராட வேண்டும். தாங்கள் நொதிக்காமல் தமிழகம் நொதிக்க வேண்டும் என்று எப்படி ஈழத் தமிழர்கள் எதிர்பார்க்கலாம்?


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். பேச்சில் நிதானம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். உத்யோகஸ்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது.





ரிஷபராசி அன்பர்களே! எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமத மாகும். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். கணவன், மனைவி அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும்.





மிதுனராசி அன்பர்களே! புத்தி சாதூரி யமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். அடுத்தவரிடம் உங்களது செயல் திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் முடிவதில் தாமதப் போக்கு காணப்படும். தேவையற்ற மனச்சஞ்சலம் உண்டாகலாம். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். புதிய வாடிக்கையாளர் களிடம் நிதானமாக பேசி வியாபாரம் செய்வது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்ட வர்கள் விலகி விடுவர். முயற்சிகள் சாதக மான பலன் தரும். ராசிநாதன் செவ்வாயால் லாபம் அதி-கரிக்கும். தொழில் வியாபாரத் தில் இருந்த போட்டிகள் அகலும். தடைப்பட்ட பண உதவி கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.




கன்னிராசி அன்பர்களே! கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டியது அவசியம். சுலபமாக முடிந்து விடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமத மாகலாம். ராசிக்கு 12ல் சஞ்சரிக்கும் ராசியாதிபதி புதன் மனதில் இருந்த கவலையை போக்கி நிம்மதி தருவார். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.வெளியூர் பயணம் அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம்.





துலாம்ராசி அன்பர்களே! செயல் திறமை அதிகரிக்கும்.நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் விரிவாக்கத்திற்கு தேவையான நிதியுதவி கிடைக்கும். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் பணிச் சுமை குறைந்து காணப்படும். குடும்பத்தினரிடம் நன்மதிப்பை பெறுவீர்கள்.





விருச்சிகராசி அன்பர்களே! ஆக்கப்பூர்வமான யோசனைகளை செயல்படுத்தி எதிலும் வெற்றி காண்பீர்கள். செயல் திறன் அதிகரிக்கும். நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். கணவன், மனைவி மனம் விட்டு பேசுவது நன்மை தரும்.








தனுசுராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். எதிர் பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசுலாகும்.




மகரராசி அன்பர்களே! எதிலும் சாதகமான நிலை காணப்படும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டாகும். புதிய நண்பர்கள் கிடைப்பர். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். பழைய பாக்கிகள் வசுலாகும். வியாபாரம், தொழில் தொடர்பான கடிதப் போக்கு சாதகமான பலன் தரும்.




கும்பராசி அன்பர்களே! இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். எதிர் பாராத உதவியால் நன்மை ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். எதிர் பார்த்த பணம் வந்து சேரும்.




மீனராசி அன்பர்களே! எல்லாக் காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நட்பு வகையில் கவனம் தேவை. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். எதிர் பார்த்த பண உதவி கிடைக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## விஜய் பதவியேற்பு விழாவில் மரபு மீறல் வெடித்த புதிய சர்ச்சை!

4ம் பக்கத் தொடர்ச்சி) தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் மூன்றாவது பாடலாக ஒலிக்கப்பட்டது. ஆனால் இனிவரும் காலங்களில் இந்தப் புதிய நடைமுறை பின்பற்றப்படாது. மாறாக, இதற்கு முன்பிருந்த நடைமுறைப்படியே, நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், நிகழ்ச்சியின் இறுதியில் தேசிய கீதமும் இசைக்கப்படும்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும், அந்தந்த மாநில மொழி வாழ்த்துப் பாடலே நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இசைக்கப்பட வேண்டும். அதற்கு ஒன்றிய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஒட்டுமொத்த தமிழக மக்களின் உணர்வும் ஒருமித்த எண்ணமும் அதுதான். எங்களுடைய உறுதியான நிலைப்பாடும் அதுதான். வாய்மையே வெல்லும்! வாழ்க தமிழ்!'' என தெரிவித்துள்ளார்.

## 30 ஆண்டுகால ஈழப்போரில் தேசியத் தலைவர் பிரபாகரன் சந்தித்த சிங்கள இராணுவ அதிகாரி

(8ம் பக்கத் தொடர்ச்சி) பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலக்முதலி இது குறித்து கொத்தலாவலவிடம் கேள்வி எழுப்பிய போது, முதல் உலகப் போரின் போது பிரித்தானிய மற்றும் ஜெர்மன் வீரர்கள் கிறிஸ்துமஸ் நாளில் ஒன்றாகக் கால்பந்து விளையாடிய சம்பவத்தை எடுத்துக் காட்டாகச் சொல்லி, போர்க்களத்தில் மட்டுமே மனிதர்கள் எதிரிகள் ஆகிறார்கள் என்று அவர் பதிலளித்ததாகக் கூறப்படுகிறது.

பின்னர் இவர்களைப் பற்றிப் பல வதந்திகள் பரவின. இருவரும் ஒருவரை ஒருவர் சுடமாட்டோம் என்று உடன்பட்டிருந்தார்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ரஹீம், புலி துப்பாக்கிச் சுடுபவரிடமிருந்து கொத்தலாவலவின் உயிரைக் காப்பாற்றினார் போன்ற கதைகள் பரவின. ஆனால் அவற்றை ரஹீம் பின்னர் மிகைப்படுத்தப்பட்ட கற்பனைகள் என மறுத்தார்.

அது அரசியல் உறவு அல்ல. மனித உறவு, என்பதே அவரது தெளிவான பதில். இருவரும் பள்ளி நண்பர்கள் என்றும் வதந்தி இருந்தது. ஆனால் அதுவும் உண்மையல்ல. கொத்தலாவல Ananda College இல் கல்வி கற்றவர் ரஹீம் Trinity College மாணவர்.

1990இல் புலிகள் இயக்கத்தின் உள்மோதல்களுக்கு பின்னர் ரஹீம் இயக்கத்திலிருந்து விலகி பாதுகாப்பிற்காக கனடாவுக்கு சென்றார். இன்றும் அங்கேயே வாழ்கிறார். 1991இல் அமெரிக்கா சென்றிருந்த கொத்தலாவல, ரஹீமின் தொலைபேசி இலக்கத்தைத் தேடி மீண்டும் தொடர்பு கொண்டார். அப்போது முன்னாள் புலி உறுப்பினருடன் தொடர்பில் இருப்பது பெரும் பிரச்சினையாகக் கருதப்படவில்லை. அதன் பின்னரும் பல ஆண்டுகள் அவர்களது நட்பு தொடர்ந்தது.

பின்னர் லெப்டினன்ட் கர்ணல் கொத்தலாவல இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார். 2000ஆம் ஆண்டு சாலை விபத்தில் அவர் உயிரிழந்தார். ஆனால் ரஹீமின் குடும்பத்தாரும் தற்போது அவுஸ்திரேலியாவில் வாழும் கொத்தலாவலவின் குடும்பத்தாரும் இன்னமும் நெருங்கிய உறவில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கதை இறுதியில் சொல்ல வருவது ஒன்று தான் போர் ஆயிரக் கணக்கான உயிர்களையும் சொத்துக்களையும் அழித்தது. ஆனால் அந்த அழிவுகளுக்கிடையில் சில மனிதத் தருணங்கள் மட்டும் காலத்தைக் கடந்து நிற்கின்றன. இன்று இந்த நட்பைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று ரஹீமிடம் கேட்கப்பட்டபோது, அவர் கூறிய பதில் மனதை உலுக்கும்:

பிரபாகரனின் போர் முடிந்து விட்டது. நானும் ஆயுதப் பாதையை விட்டு வெளியேறி விட்டேன். இவ்வளவு அழிவும் உயிர்ப்பலியும் நடந்த பிறகு யாருக்கு என்ன கிடைத்தது என்று நினைக்கிறேன். இறுதியில் எஞ்சியது இந்த நட்புதான். மேலும் அவர் கூறினார்:

போரில் எதிரிகளாக இருந்தாலும், சில தருணங்களில் மனிதர்களாக ஒருவரை ஒருவர் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும். அந்த தருணங்களை நாம் உதாசீனம் செய்யக் கூடாது. அவை மனிதனை மிருகமாக அல்ல, இன்னொரு மனிதனாகப் பார்க்கச் செய்கின்றன.

அதனால் தான், எதிர்ப்புகளையும் மீறி உயிரிழந்த சிப்பாய்களின் உடல்களை அவர்களது குடும்பங்களுக்கு திருப்பிக் கொடுக்க முனைந்த ரஹீமின் மனித நேயமும், அதை மதித்த கொத்தலாவலவின் மனப்பான்மையும் இன்று வரை நினைவுகூரப்படுகின்றன.

## வளமான தமிழகம் மட்டுமல்ல வளமான ஈழம்

(3ம் பக்கத் தொடர்ச்சி) எதிர்காலம் பாரிய பொருளாதார வாய்ப்பு களைக் கொண்டுள்ளது. இந்தியா - இலங்கை இடையிலான வலுவான பங்காண்மையின் ஊடாக, பிராந்தியத்தின் மேலான செழுமை மற்றும் முன்னேற்றத்திற்காக உங்களுடன் இணைந்து பணியாற்ற நான் ஆவலுடன் காத்திருக்கின்றேன். உங்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் எனது மற்றும் இலங்கை மக்களின் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.' இலங்கை மற்றும் தமிழ்நாட்டிற்கு இடையிலான வரலாற்று மற்றும் கலாசார உறவுகளைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, புதிய முதலமைச்சரின் பதவிக்காலம் சிறக்க வாழ்த்தியுள்ளார்.

### எதிர்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து

தமிழகத்தின் புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ள தமிழக முதல்வர் விஜய்க்கு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச, தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். சமூக நீதி மற்றும் மதச்சார்பின்மையை அடித்தளமாகக் கொண்ட ஒரு புதிய யுகத்தைப் பற்றி நீங்கள் பேசினீர்கள்.

வெறுப்பு மற்றும் பழைய காயங்களின் மீது மட்டுமே கட்டப்படும் சமூகங்கள் இறுதியில் தனிமைப்படுத்தப்படும் என்பதையும் அதே நேரத்தில் நீதி மற்றும் சகவாழ்வின் மீது கட்டப்படும் சமூகங்களே மக்கள் உண்மையாக வாழ விரும்பும் எதிர்காலத்தை உருவாக்கும் என்பதையும் வரலாறு நமக்குக் காட்டியுள்ளது. நம்மைப் பிரிக்கும் விடயங்களை விட, நம்மிடையே உள்ள பொதுவான பண்புகளும் ஒற்றுமைகளும் மிக அதிகம் இந்தப் புதிய அத்தியாயம் முன்னேற்றத்தையும், கருணையையும், கடந்த காலத்தில் மற்றவர்கள் இடைவெளியை உருவாக்கிய இடங்களில் ஒருமித்த புரிதலையும் ஏற்படுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டு வரும் என எதிர் பார்க்கின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# சட்டத்தரணிகளின் அறிவின் அறம் தமது சமூகத்தின் வாழ்வை வலுவாக்குவதே!

(14ம் பக்கத் தொடர்ச்சி) இலங்கையின் அரசியல் யாப்பில் 13வது திருத்தம் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட வேண்டும் என்றும் அதற்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் கோருகிற பிரச்சாரங்களை அவ்வப்போது மேற்கொள்கிறார்கள், ஆனால்,

● இவர்கள் மாகாண சபைகளுக்கான தேர்தலை அரசாங்கம் நடத்தினால் போட்டி போடத் தயாராக இருக்கிறார்களே தவிர, கடந்த எட்டு ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டிருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வைப்பதற்கான வலுவானதொரு தொடர் இயக்கத்தை கூட்டாக அதே எண்ணம் கொண்ட அனைத்து சக்திகளையும் அணி திரட்டியபடி முன்னெடுப்பவர்களாக இல்லை.மேலும்,

● 13வது திருத்தம் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முழுமையாக வழங்குவது தொடர்பாக தேவையான அரசியற் கோரிக்கைகளையும் அதற்கான ஒரு முழுமையான தெளிவான அரசியல் வரைபையும் எழுத்து மூலம் தயாரித்து வெளியிடும் வேலைத் திட்டத்தில் அதற்கு இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் ஆதரவு திரட்டும் வேலைத் திட்டத்தில் இது வரை இவர்கள் உளப்பூர்வமான ஈடுபாடு கொண்டிருப்பதாக தெரியவில்லை.


இவர்களினுடைய அரசியலின் இன்னொரு மிகப் பெரிய குறைபாடு என்னவென்றால் திரு. கஜேந்திரகுமாரின் அரசியல் வளையத்துக்கு உள்ளே சுழல்வதில் தான் அதாவது தாங்களும் சமஸ்டிக்காரர்கள் தான் என்று நிரூபிப்பதிலே தான் பெரும்பாலும் இவர்களது அரசியல் காலம் ஓடிக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் தமிழர்களுக்கான அரசியற் தீர்வுக்கான ஒரு பொது அரசியல் வரைபு என்கிற விடயம் வருகையில், சமஸ்டி அடிப்படையிலான ஓர் அரச கட்டமைப்புக்கான கொள்கைகளைக் கொண்டதாகத்தான் இவர்களது அரசியல் நிலைப்பாடு அமைகிறதென்றால், இவர்கள் திரு கஜேந்திரகுமாரின் தலைமையில் அமைந்த த.தே.ம. முன்னணியுடன் இணைந்தே, அந்த வரைபை சுலபமாக ஒரே வரைபாக மேற்கொண்டு விடலாமே? அதற்கு தமிழ் சட்ட வல்லுனர்களின் அறிவும் அனுபவங்களும் தேவையே இல்லை.

சமஸ்டி அடிப்படையிலான எந்தவொரு அரசியல் தீர்வு வரைபும் அவர்களது கட்சி அலுவலகத்தைத் தாண்டி ஓரடி கூட முன்னோக்கிச் செல்லாது என்ற பொது அறிவு இந்த தமிழ்க் கட்சிகளுக்கெல்லாம் நிச்சயமாக இருக்கும். சமஸ்டி தீர்வுத் திட்டமானது இந்த கட்சிகளுக்கு அவர்களது தேர்தற் காலங்களில், தாங்கள் தான் தமிழ் மக்களுக்கான தீர்வை முன் வைப்பதில் அதி உச்சமான மாவீரர்கள் என பிரச்சாரம் பண்ணுவதற்கு மட்டுமே பயன்படும். இலங்கையில் சமஸ்டிக் கோரிக்கையோடு கடந்த 75 ஆண்டுகளாக பயணித்த தமிழர்கள் தொடர்ந்தும் இன்னுமொரு 75 ஆண்டு காலம் அப்படியே பயணிக்கலாம். இலங்கையில் நிலவும் அரசியலும், தமிழர்களின் இப்போதைய பரிதாப அரசியல் நிலையும் சமஸ்டிக்கான எந்த சாத்தியத்தையும் காட்டவில்லை என்பதை படித்த தமிழர் நன்கு அறிவர்.

### நந்திக்கடல் வரை தமிழீழக்கனவு

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாங்களும் சமஸ்டிக்காரர்கள் தான் என்று கூறிக்கொள்கிற போதிலும், திரு கஜேந்திரகுமாரும் அவரது அணியினரும் 13வது திருத்த ஏற்பாடுகளையும் அதன் அடிப்படையிலான மாகாண ஆட்சி முறையையும் முற்றாக நிராகரிப்பது தவறானது என்றும் திரு கஜேந்திரகுமார் அணியினரின் சமஸ்டிக் கோரிக்கையானது அவர்களது இயலாமைகளையும் கற்பனா வாதங்களையும் அடிப்படையாகக் கொண்டது என்பதனையும் மிக உறுதியாகவே கூறி வருகிறார்கள். இதேவேளை, தமிழரசுக் கட்சியினர் சமஸ்டிக் கோரிக்கையை அடிக்கடி




உமிழ்ந்தபடியே தான், அரசியல் யாப்பின் 13வது திருத்த ஏற்பாடுகள் முறையாகவும் முழுமையாகவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்கிறார்கள்.

எனவே, அரசியல் யாப்பின் 13வது திருத்தம் பற்றி விழுங்கி விழுங்கி பேசுவதை விடுத்து, அதன் ஏற்பாடுகளிலும் 1987ம் ஆண்டின் மாகாண சபைகள் சட்டத்திலும் உள்ள குறைகளை, குறைபாடுகளை, குழறுபடிகளை நீக்கி அதில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை தெளிவாக பகிருகின்ற வகையாக ஓர் அரசியல் வரைபை மேற்கொள்வது பற்றி, தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் முடிந்தளவு ஏனைய அரசியற் கட்சிகளின் தலைவர்களையும் இணைத்து கூட்டாக சிந்திப்பதே இன்றைய காலகட்டத்துக்கு அவசியமாகும் பொருத்தமானதாகும். அதை விடுத்து, வடக்கையும் கிழக்கையையும் இணைத்த இந்திய இலங்கை ஒப்பந்தமே வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வின் தீர்வுத் திட்டமே சிறந்தது என்றும், மைத்திரி — ரணில் ஆட்சிக் கால ஒருமித்த ஆட்சிக் கருத்தையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்றும் இனியும் ஏட்டுச் சுரைக்காய் கதைகள் பேசிக் கொண்டிருந்தால் இலங்கைவாழ் தமிழர்களின் அரசியல் பொருளாதாரம் தொடர்ந்தும் பாதாளத்திலேயே கிடக்கும்.

### இருப்பதை இழந்து விடாமல் இருக்க உருப்படியாக கடமை ஆற்றுங்கள்

தமிழர்கள் மத்தியில், பல்கலைக்கழகங்களில் சட்டத்துறையில் பேராசிரியர்களாக, சிரேஸ்ட விரிவுரையாளர்களாக இருந்த இப்போதும் இருக்கின்ற சமூக ஆர்வலர்கள் பலர் உள்ளனர். சட்டத் தொழிற் துறையில் நீண்டகால அனுபவங்கள் கொண்ட மூத்த வழக்கறிஞர்கள் பலர் இப்போதும் சமூக அக்கறையோடு இருக்கிறார்கள். இந்த வகையில் தமிழர்களுக்கான அரசியல் ரீதியான முன்னேற்றம் தொடர்பில் தமிழ் சட்டத்தரணிகள் சங்கத்தினரின் பங்களிப்பு மிக முக்கியமானது அவசியமானது. தமிழ் சட்ட வல்லுனர்களே! உங்களது மனச்சாட்சிக்கு உண்மையானவர்களாக நீங்கள் உங்களது பங்களிப்பை மேற்கொள்ளும் போதே அது மக்களுக்கு பயனுள்ளதாக அமையும். உங்கள் சமூக பங்களிப்பு மிக முக்கியமானது அவசியமானது என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. அதற்கு முதலில் நீங்கள் பதில் காண வேண்டிய சில அடிப்படையான கேள்விகள் உள்ளன.

முதலாவதாக, ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியினர் எதிர்க் கட்சியாக இருந்த கால கட்டத்தில் கூறியபடி எவ்வகையிலாயினும் ஒரு புதிய அரசியல் யாப்பைக் கொண்டு வருவதற்கு உளப்பூர்வமாக முயற்சிப்பார்கள் என்று நம்புகிறீர்களா?

அப்படித்தான் அவர்கள் தங்களது சில காரணங்களுக்காக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டிருக்கின்ற இன்றைய கால கட்டத்திலேயே ஒரு புதிய அரசியல் யாப்பை கொண்டு வர முற்பட்டாலும் அதில் தமிழர்களுக்கான அரசியற் தீர்வு விடயம் தொடர்பில், 13வது திருத்த ஏற்பாடுகளுக்கும் மேலாக முன்னேற்ற கரமான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு தயாராக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறீர்களா?

இதைப் பற்றி நீங்கள் தெரிந்திருந்தும், 'தமிழர்களின் நியாயமான அரசியற் தீர்வுத் திட்டத்தை தமிழர்களின் ஒருமித்த அரசியற் தீர்வுக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை' எனக் கூறியபடி, தமிழர்கள் 2009ம் ஆண்டுக்கு முந்திய பழைய அரசியலை ஒரு புதிய வடிவில் எடுத்து மீண்டும் வீறு கொண்டு செயற்பட வழி வகுக்கலாம் என்கிறீர்களா? அது சரியா பிழையா என்பது ஒரு புறமிருக்க, அப்படியானதொரு அரசியற் பயணத்தை தமிழர்கள் மேற்கொள்ள எங்காவது எப்படியாவது ஒரு பாதை வழிமுறை இருக்கிறதென நீங்கள் தெளிவாகவும் உறுதியாகவும் நம்புகிறீர்களா?

இரண்டாவதாக, 13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்று என்ற கோரிக்கைக்கு அப்பால் எந்த அளவிலும் எந்த வகையிலும் தம்முடன் நட்பாக உள்ள தமிழ் அரசியற் கட்சிகளுடன் கூட இணைந்து செயற்படுவதற்கு முஸ்லிம் மக்களினுடைய கட்சிகளின் தலைவர்களும், மலையக தமிழ் மக்களினுடைய கட்சிகளின் தலைவர்களும் தயாராக இல்லை என்பதனை ஏற்கனவே இலங்கைத் தமிழர்களினுடைய அரசியற் கட்சிகளின் தலைவர்களுக்கு திட்டவட்டமாக தெரிவித்து விட்டார்கள். சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகளின் மத்தியிலும் இதே நிலைமைதான் உள்ளது. இந்த மூன்று பகுதியினரும் 13வது திருத்த ஏற்பாடுகளோடு ஒட்டிய அரசியல் வேலைத் திட்டத்துக்கு மட்டுமே தயாராக உள்ளனர் என்பது பொதுவாக அறியப்பட்ட விடயமே. இப்படியான ஒரு நிலைமையில் சட்டத்தரணிகள் சங்கத்தினராகிய நீங்கள் தமிழர்களின் அரசியலை ஒரு முன்னேற்றப்பாதையில் கொண்டு போய் நிறுத்துவதற்கு உரிய இலக்குகளுடன் பங்களிப்பதா அல்லது தமிழர்களின் அரசியல் தேர்தல் எல்லைகளுக்கு உள்ளே 'குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுவது' போல அமைவதற்கு அர்ப்பணிப்பதா?

மூன்றாவதாக சமஸ்டி அரசியற் கட்டமைப்புக்கான ஒரு சட்ட வரைபால் எவ்வித பயனுமில்லை, அது ஓரடியும் முன்னேறாது. த.தே.ம. முன்னணியினருக்கு தொடர்ந்து ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஆசனம் உறுதியாக கிடைப்பதற்கு உதவலாம். அதற்கு மேல் அது தமிழருக்கு பயன்படாது. தமிழர்களின் சமஸ்டிக் கோரிக்கையை காது கொடுத்து கேட்பதற்கோ, கண் கொண்டு வாசிக்கவோ, அதற்கான குரல் கேட்டு இரக்கம் கொள்வதற்கோ இன்று யாரும் தமிழர் சமூகத்துக்கு வெளியே இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே. தமிழர் சமூகத்துக்கு வெளியேயுள்ள எவரும் எந்த நிறுவனமும் தமிழர்களின் சமஸ்டிக் கோரிக்கை கொண்ட அறிக்கையை மரியாதை நிமித்தமாக கை நீட்டி பெற்றுக்கொண்டாலும் கூட, அதனை அடுத்த நிமிடமே குப்பைத் தொட்டியிலே போட்டு விட்டு போய்க் கொண்டே இருப்பார்கள் என்பதை இன்னமும் நீங்கள் உணரவில்லையா?

### அறிவார்ந்தோர்களின் ஆற்றல்கள் முன்னேற்றங்களை சாதிப்பதற்கே!

தமிழர்களில் ஒரு பகுதியினர் தூக்கிப் பிடிக்கும் சமஸ்டி கோசத்தை ஆதரிக்க இங்கே முஸ்லிம்கள் இல்லை மலையகத் தமிழர்கள் இல்லை, எந்த சிங்களவரும் இல்லை, இந்தியா இல்லை, சீனா இல்லை, அமெரிக்கா இல்லை, ஐரோப்பா இல்லை ஜெனீவாவும் இல்லை, அதற்கு இன்று உலகில் எவருமே நண்பர்கள் இல்லை. சமஸ்டி என்பது இப்போது ஒரு தேர்தல் அரசியற் சுத்துமாத்து என்பது இலங்கை வாழ் தமிழர்களில் பெரும்பாலானவர்களுக்கு புரிகிறது. இப்படியான ஒரு நிலைமையில் தமிழ் சட்டத்தரணிகள் சங்கத்தவர்களாகிய நீங்களும் 'கடைசித் தமிழனும் கனடா போய்ச் சேரும் வரை' சமஸ்டி எனும் சுலோகத்தை தூக்கி நிறுத்துவதில் காலத்தைக் கடத்துவீர்களாயின் அது உங்களது துறைசார் அறிவையும் அனுபவங்களையும் கேலிக்குரியவைகளாக ஆக்கிவிடும்.

இப்போதிருக்கும் மாகாண ஆட்சி முறை சீரானதாகவும் வலுவானதாகவும், குறைந்த பட்சமாவது மத்திய ஆட்சியின் அநாவசியமான தலையீடுகள் இன்றி சுயாதீனமுடையதாக, காரிய ஆற்றல்கள் மிக்கதாக அமைவதற்கு சட்ட வல்லுனர்கள் பங்களிப்பு மிக அவசியமாகும். இப்போதிருக்கும் 39 ஆண்டுகளாக முழுமையாக நிறைவேற்றப்படாத 13வது திருத்த ஏற்பாடுகள் பற்றி இப்போது பேசி என்ன பிரயோசனம் என்று நீங்களும் பேசாதீர்கள். இந்த வாதம், இல்லாத ஒன்றை மட்டுமல்ல, கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லாத ஒன்றை இருப்பதாக கற்பனை பண்ணிக் கொண்டு, அரை குறையாகத் தானும் இருக்கின்ற ஒன்றை இல்லாமற் செய்கின்ற முயற்சியாகும். அரைகுறையாக இருப்பதை முறைப்படுத்துவதுவும் முழுமைப் படுத்துவதுவும் சட்ட வல்லுனர்களின் கடமையே. (தொடரும்)




# முன்னாள் முதல்வர் ஸ்டாலின், வை.கோ ஆகியோரிடம் நேரில் சென்று ஆசியும் வாழ்த்தும் பெற்றார் முதல்வர் விஜய்



தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த தவெகவின் தலைவர் ஜோசப் விஜய் தமிழக முதல்வராக நேற்று பொறுப்பேற்றார். இந்த சூழலில் அவர் இன்று தமிழக முன்னாள் முதல்வரும திமுக தலைவருமான மு.க.ஸ்டாலினை அவரின் இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

முன்னாள் முதல்வர் ஸ்டாலினை சந்திக்க ஆழ்வார்பேட்டை இல்லத்துக்கு வந்த ஜோசப் விஜய்யை சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாசலுக்கே வந்து ஆரத் தழுவி வரவேற்றார்.

முன்னாள் முதல்வர் ஸ்டாலினுக்கு ஜோசப் விஜய் பொன்னாடை போர்த்தி வாழ்த்து பெற்றார். பதிலுக்கு ஸ்டாலினும் ஜோசப் விஜய்க்கு பொன்னாடை போர்த்தினார். உதயநிதி ஸ்டாலின் ஜோசப் விஜய்க்கு புத்தகம் வழங்கினார்.

இதனையடுத்து முதல்வர் ஜோசப் விஜய் முன்னாள் முதல்வர் ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் சிறிது நேரம் உரையாடினார்கள். இந்த சந்திப்பின் போது முன்னாள் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ஐ.பெரியசாமி, சக்கரபாணி, சேகர்பாபு உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

இந்தச் சந்திப்பு குறித்து திமுக தலைவர் ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள விஜய் அரசியல் நாகரிகத்துடன் என்னைச் சந்தித்து வாழ்த்து பெற்றார். அவருக்கு என் அன்புநிறை வாழ்த்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கினேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மதிமுக பொதுச் செயலர் வைகோவை சந்தித்து வாழ்த்து பெற்றார் முதல்வர் ஜோசப் விஜய்

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த தவெகவின் தலைவர் ஜோசப் விஜய், தமிழக முதல்வராக பொறுப்பேற்றார். இந்தச் சூழலில், அவர் இன்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோவை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். ம.திமுக பொதுச் செயலாளர் வைகோவை சந்திக்க சென்னை அண்ணா நகரில் உள்ள அவரின் இல்லத்துக்கு வந்த விஜய்யை, மதிமுக முதன்மை செயலாளர் துரை வைகோ ஆரத் தழுவி வரவேற்றார். வைகோவுக்கு ஜோசப் விஜய் பொன்னாடை போர்த்தி வாழ்த்து பெற்ற நிலையில், பதிலுக்கு வைகோவும் ஜோசப் விஜய்க்கு பொன்னாடை போர்த்தினார்.



இதனையடுத்து முதல்வர் ஜோசப் விஜய், வைகோவுடன் சிறிது நேரம் உரையாடினார். இதன் பின்னர் வைகோவும், விஜய்யும் கைகோத்தபடி வெளியே வந்தனர். அப்போது இருவரும் இல்லத்துக்கு வெளியே கூடியிருந்தவர்களைப் பார்த்து கையசைத்தபடி மகிழ்ச்சியோடு வந்தனர். அதன்பின்னர் ஜோசப் விஜய்யை வைகோ காரில் வழியனுப்பி வைத்தார்.

## அ.தி.மு.க.விற்குள் பிளவு?

இது இவ்வாறிருக்க அதிமுக சட்டமன்றக் குழுத் தலைவராக எடப்பாடி பழனிசாமி செயல்படுவார் என அக்கட்சியைச் சேர்ந்த 17 சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவைச் செயலரிடம் மனு அளித்துள்ளனர். இதனால், அதிமுக சட்டமன்றக் குழு தலைவர் பதவியைத் தக்கவைப்பதில் பழனிசாமிக்குச் சிக்கல் எழுந்துள்ளது.

17வது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் தொடங்கிய போது. அதிமுக வில் மொத்தம் 47 எம்எல்ஏக்கள் உள்ள நிலையில் சட்டமன்ற கட்சித் தலைவர் பதவிக்கு எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாக இதுவரை 17 எம்எல்ஏக்கள் மட்டுமே சட்டமன்றச் செயலரிடம் மனு அளித்துள்ளனர். அதில் அதிமுக சட்டமன்றக் குழுத் தலைவராக எடப்பாடி பழனிசாமி செயல்படுவார் என கூறப்பட்டுள்ளது.

மீதமுள்ள 30 எம்எல்ஏக்களின் நிலைப்பாடு என்ன என்பது கேள்விக்குறியாகியுள்ளது. எஸ்.பி.வேலுமணி, சி,.வி. சண்முகம் தலைமையிலான குழுவில் அதிகப்படியான எம்எல்ஏக்கள் இருப்பதாகக் கூறப்படுவதால், அதிமுகவில் எடப்பாடி பழனிசாமியின் தலைமைக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளதாக சொல்லப்படுகிறது. சட்டமன்றத்துக்கு, எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக எம்எல்ஏக்கள் ஒரு குழுவாகவும், எஸ்.பி.வேலுமணி தலைமையில் ஒரு குழுவாகவும் தனித்தனியாக வந்தனர். இருவரும் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

எடப்பாடி பழனிசாமிக்கு 17 பேர் மட்டுமே ஆதரவு தெரிவித்துள்ள தகவல் உறுதியாகும் பட்சத்தில், அவர் அதிமுக சட்டமன்ற குழு தலைவர் பதவியைத் தக்கவைத்துக் கொள்வதில் சிக்கல் ஏற்படலாம். வரும் நாட்களில் அதிமுகவில் இந்த அதிகாரப் போட்டி மேலும் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

